# மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான குறைந்தபட்ச வினாவிடைச் சுருக்கம்

# பொருளியல்

## மேல்நிலை - இரண்டாம் ஆண்டு

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

**1. செல்வ இலக்கணத்தின் ஆசிரியர் :**

(அ) ஆல்பிரடு மார்ஷல் (ஆ) இலயனல் ராபின்ஸ்

(இ) ஆடம் ஸ்மித் (ஈ) சாமுவேல்சன் **( விடை : இ )**

**2. கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர் :**

(அ) ஆடம் ஸ்மித் (ஆ) இலயனல் ராபின்ஸ்

(இ) ஆல்பிரடு மார்ஷல் (ஈ) சாமுவேல்சன் **( விடை : ஆ )**

**3. நிகர பொருளாதார நலம் பற்றிய கருத்தை எடுத்துரைத்தவர்**

(அ) சாமுவேல்சன் (ஆ) ஆல்பிரடு மார்ஷல்

(இ) இலயனல் ராபின்ஸ் (ஈ) ஆடம் ஸ்மித் **( விடை : அ )**

**4. பொருளாதாரம் என்பது**

(அ) இயல்புரை அறிவியல் (ஆ) நெறியுரை அறிவியல்

(இ) இரண்டுமே (ஈ) எதுவுமில்லை **( விடை : இ )**

**5. பொருளாதாரத்தில் நாம் பயன்படுத்துவது**

(அ) பகுத்தாய்வு முறை (ஆ) தொகுத்தாய்வு முறை

(இ) இரண்டுமே (ஈ) எதுவுமில்லை **( விடை : இ )**

**6. அடிப்படைப் பொருளியல் பிரச்சனைகள் பொதுவாக காணப்படும் சமூக அமைப்பு**

(அ) முதலாளித்துவம் (ஆ) சமதர்மம்

(இ) கலப்புப் பொருளாதாரம் (ஈ) அனைத்தும் **( விடை : ஈ )**

**7. பழமைப் பொருளாதாரம் என்பது**

(அ) தன்னிறைவுப் பொருளாதாரம்

(ஆ) சந்தைப் பொருளாதாரம்

(இ) கட்டளைப் பொருளாதாரம்

(ஈ) பணவியல் பொருளாதாரம் **( விடை : அ )**

**8. முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படைச் சக்தியாக விளங்குவது**

(அ) திட்டமிடல் (ஆ) தொழில்நுட்பம்

(இ) அரசு (ஈ) இலாபம் **( விடை : ஈ )**

9. **சமதர்மப் பொருளாதாரத்தில், உற்பத்தி, பகிர்வு மற்றும் தீர்வுகளை முடிவு செய்வது**

(அ) சந்தை (ஆ) மத்திய திட்டக்குழு

(இ) பழக்கவழக்கமும், மரபும் (ஈ) தனியார்துறை **( விடை : ஆ )**

10. **மெதுவான வேலையும், கையூட்டும் கீழ்க்கண்டவற்றுள் எதற்கு காரணமாக விளங்குகிறது.**

(அ) உற்பத்தியின் திறமைக்குறைவு

(ஆ) வருமானம் மற்றும் செல்வத்தில் ஏற்றத்தாழ்வு

(இ) தொழில் நுட்பமின்மை

(ஈ) வளங்களைத் திறமையாக பயன்படுத்துதல் **( விடை : அ )**

11. **இன்றியமையாத, வசதி, ஆடம்பர பண்டங்கள் என்பது**

(அ) இலவச பண்டங்களை வகைப்படுத்துதல்

(ஆ) விருப்பங்களை வகைப்படுத்துதல்

(இ) பயன்பாட்டினை பிரிப்பது

(ஈ) எதுவும் இல்லை **( விடை : அ )**

12. **சமநோக்கு வளைகோட்டின் அணுகுமுறையை அறிமுகப்படுத்தியவர்**

(அ) மார்ஷல்

(ஆ) இலயன்ஸ் ராபின்ஸ்

(இ) J.R.ஹிக்ஸ் மற்றும் R.G.D ஆலன்

(ஈ) ஆடம் ஸ்மித் **( விடை : இ )**

13. **பயன்பாடு என்பது**

(அ) சமூக கருத்து

(ஆ) உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் கருத்து

(இ) அரசின் கருத்து

(ஈ) அறிவியல் கருத்து **( விடை : ஆ )**

14. **ஒற்றை பண்ட நுகர்வு எதை உணர்த்தும்**

(அ) உற்பத்தி வாய்ப்பு வளைக்கோடு

(ஆ) சம - இறுதி நிலை பயன்பாட்டு விதி

(இ) அளிப்பு விதி

(ஈ) குறைந்து செல் இறுதி நிலை பயன்பாட்டு விதி **( விடை : ஈ )**

15. **நுகர்வோர் எச்சம் என்பது**

(அ) தகுவிலை - உண்மைவிலை

(ஆ) MVn = TVn - TVn-1

(இ) தேவை மற்றும் அளிப்பு

(ஈ) இல்லை **( விடை : அ )**

16. **பண்டத்தின் தேவை இதனைச் சார்ந்தது**

(அ) பண்டத்தின் விலை (ஆ) சார்ந்த பண்டங்களின் விலை

(இ) வருமானம் (ஈ) மேற்கூறிய அனைத்தும் **( விடை : ஈ )**

**17. தேவை விதி உணர்த்துவது**

(அ) விலை, பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு

(ஆ) விலை, பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு

(இ) இரண்டும்

(ஈ) எதுவுமில்லை **( விடை : அ )**

**18. தேவையின் அதிகரிப்பை இதன் மூலம் காணலாம்**

(அ) தேவை வளைக்கோடு இடம் பெயர்வது

(ஆ) ஒரே தேவை வளைக்கோட்டில் நகர்ந்து செல்லுதல்

(இ) தேவை வளைகோட்டின் உச்சப்புள்ளி

(ஈ) தேவை வளைகோட்டின் கீழ் புள்ளி **( விடை : ஆ )**

**19. விலையில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப தேவையின் மாற்றத்தை தோற்றுவிக்கும் அளவு**

(அ) வருமான தேவை நெகிழ்ச்சி

(ஆ) குறுக்கு தேவை நெகிழ்ச்சி

(இ) விலைத்தேவை நெகிழ்ச்சி

(ஈ) மேற்கூறிய அனைத்தும் **( விடை : இ )**

**20. அளிப்பைத் தீர்மானிக்கும் காரணிகள்**

(அ) உற்பத்தி தொழில்நுட்பம்

(ஆ) உற்பத்தி காரணிகளின் விலைகள்

(இ) வரிகளும் சலுகைகளும்

(ஈ) மேற்கூறிய அனைத்தும் **( விடை : ஈ )**

**21. சமநிலை புள்ளியில்**

(அ) ஒரே விலை நிலவும் / விலை நிலையானது

(ஆ) தேவையும் அளிப்பும் சமம்

(இ) அப்புள்ளியில் தேவைக்கோடு அளிப்புக்கோட்டை வெட்டும்

(ஈ) மேற்கூறிய அனைத்தும் **( விடை : ஈ )**

**22. சமநிலை விலைக்கும் மேல்**

(அ) S<D (ஆ) S>D

(இ) S=D (ஈ) ஏதுமில்லை **( விடை : ஆ )**

**23. தேவையின் அளவில் ஏற்படும் மாற்றம்**

(அ) விலை மட்டும் மாறும்பொழுது

(ஆ) சுவையில் மாற்றம் ஏற்படும் பொழுது

(இ) மேற்கூறிய இரண்டும்

(ஈ) எதுவுமில்லை **( விடை : இ )**

**24. சமநிலை விலையில் காலத்தின் பங்கை அறிமுகப்படுத்தியவர்**

(அ) J.R.ஹிக்ஸ் (ஆ) J.M.கீன்ஸ்

(இ) ஆல்பிரட் மார்ஷல் (ஈ) J.S.மில் **( விடை : இ )**

25. நீண்ட காலத்தில்

(அ) எல்லா காரணிகளும் மாறும்

(ஆ) மாறும் காரணி மட்டும் மாறும்

(இ) மாறும் மற்றும் மாறா காரணிகள் நிலையாக இருக்கும்

(ஈ) மாறா காரணி மட்டும் மாறும் ( விடை : அ )

26. உற்பத்தி என்பது

(அ) பயன்பாட்டின் அழிவு (ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்

(இ) மாற்று மதிப்பு (ஈ) ஏதுமில்லை ( விடை : ஆ )

27. நிலத்தின் ஆரம்பஅளிப்பு விலை

(அ) பூஜ்யம் (ஆ) ஒன்றுக்கும் அதிகமானது

(இ) ஒன்றுக்கும் குறைவானது (ஈ) ஒன்றுக்கும் சமமானது ( விடை : அ )

28. உழைப்பை ...................... இருந்து பிரிக்க முடியாது.

(அ) முதல் (ஆ) உழைப்பாளரிடம்

(இ) உற்பத்தி அமைப்பு (ஈ) இலாபம் ( விடை : ஆ )

29. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம்.

(அ) வட்டி (ஆ) இலாபம்

(இ) கூலி (ஈ) வாடகை ( விடை : அ )

30. ................ ஏற்கும் ஒருவரே வெற்றிகரமான “ தொழில் முனைவோர்” ஆவார்.

(அ) புத்தாக்கம் புனைதல்

(ஆ) இடர்பாடுகளை

(இ) உற்பத்தி அலகின் இடத்தைத் தேர்ந்தெடுத்தல்

(ஈ) ஏதுமில்லை ( விடை : ஆ )

31. உண்மைச் செலவு என்பது

(அ) துன்பம் மற்றும் தியாகமும்

(ஆ) உள்ளுணர்வு

(இ) முயற்சியும் தியாகமும்

(ஈ) மேற்கூறிய அனைத்தும் ( விடை : ஈ )

32. பணச் செலவின் உள்ளடக்கமானது வெளியுறு செலவு மற்றும்

(அ) உள்ளார்ந்த செலவு (ஆ) சமூகச் செலவு

(இ) மாறாச் செலவு (ஈ) பணச் செலவு ( விடை : அ )

33. சமூகச் செலவு என்பவை

(அ) நிறுவனங்கள் ஏற்றுக்கொள்வதில்லை

(ஆ) சமுதாயம் ஏற்கும் செலவு

(இ) உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பது

(ஈ) மேற்காணும் அனைத்தும் ( விடை : ஈ )

**34. சராசரி மாறாச் செலவு இதனால் வகுக்கும் போது கிடைக்கும்**

(அ) TC / Q (ஆ) TFC / Q

(இ) TVC / Q (ஈ) ஏதுமில்லை **( விடை : ஆ )**

**35. இறுதிநிலை வருவாய் என்பது இதனுடன் சேர்த்தால் கிடைப்பது**

(அ) சராசரி வருவாய் (ஆ) மொத்த உற்பத்தி

(இ) மொத்த வருவாய் (ஈ) எதுவும் இல்லை **( விடை : இ )**

**36. நிறைவுப்போட்டி அங்காடியில் காணப்படும் நிலை**

(அ) ஒரே விற்பனையாளர்

(ஆ) இரண்டு விற்பனையாளர்

(இ) எண்ணிக்கையில்லா விற்பனையாளர்

(ஈ) சில விற்பனையாளர் **( விடை : இ )**

**37. எந்நிலையில் ஒரு நிறுவனம் சமநிலைப் பெறும்**

(அ) MC = MR (ஆ) MC = AC

(இ) MR = AR (ஈ) MR = AC **( விடை : அ )**

**38. நிறுவனம் மற்றும் தொழிற்சாலை ஒன்றாக அமைவது**

(அ) நிறைவுப்போட்டி (ஆ) இரு விற்பனையாளர்

(இ) சில்லோர் (ஈ) முற்றுரிமை **( விடை : ஈ )**

**39. விற்பனைச் செலவின் மிக முக்கிய வடிவம் எது**

(அ) விளம்பரங்கள் (ஆ) ஒரே மாதிரியான பண்டங்கள்

(இ) விற்பனை (ஈ) எதுவும் இல்லை **( விடை : அ )**

**40. நிறைவுப் போட்டியில் தேவைக்கோடு இவ்வாறு இருக்கும்.**

(அ) மேல்நோக்கி சரிந்து செல்லும்

(ஆ) கிடைமட்டமாக இருக்கும்

(இ) கீழ்நோக்கி சரிந்து செல்லும்

(ஈ) செங்குத்தாக இருக்கும் **( விடை : ஆ )**

**41. வாரம் என்பது இதனுள் ஒன்றை பயன்படுத்தியதற்காக கொடுக்கப்படும் விலை**

(அ) மூலதனம் (ஆ) அமைப்பு

(இ) உழைப்பு (ஈ) நிலம் **( விடை : ஈ )**

**42. இலாபம் இதற்கான வெகுமதி**

(அ) நிலம் (ஆ) மூலதனம்

(இ) உழைப்பு (ஈ) அமைப்பு **( விடை : ஈ )**

**43. உழைப்பு ஏன் தேவைப்படுகிறது**

(அ) உறுதி தேவை (ஆ) நேரடி தேவை

(இ) பெறப்பட்ட தேவை (ஈ) நெகிழ்ச்சி தேவை **( விடை : இ )**

**44. போலி வாரம் என்ற கருத்தின் ஆசிரியர்**

(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல்

(இ) ரிக்கார்டோ (ஈ) சாமுவேல்சன் **( விடை : ஆ )**

**45. நீர்மை விருப்ப கோட்டின் ஆசிரியர்**

(அ) J.M.கீன்ஸ் (ஆ) மார்ஷல்

(இ) சாமுவேல்சன் (ஈ) நைட் **( விடை : அ )**

**46. பேரியல் பொருளியல் சிந்தனையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர்**

(அ) டேவிட் ரிக்கார்டோ (ஆ) J.M.கீன்சு

(இ) ஆடம் ஸ்மித் (ஈ) மால்தஸ் **( விடை : ஆ )**

**47. தொன்மைப் பொருளியல் கோட்பாடு ................ நிலவுவதாக கருதுகிறது.**

(அ) வேலையில்லா நிலை (ஆ) மறைமுக வேலையின்மை

(இ) முழுவேலை நிலை (ஈ) குறை வேலையின்மை **( விடை : இ )**

**48. பேரியல் பொருளாதாரத்தில் மையப் பிரச்சனை**

(அ) வருமானமும் வேலை வாய்ப்பும்

(ஆ) விலையும் வெளியீடும்

(இ) வட்டியும் பணமும்

(ஈ) எதுவுமில்லை **( விடை : அ )**

**49. வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டை விளக்க கீன்சு.............. பயன்படுத்தினார்.**

(அ) நுகர்வையும் முதலீட்டையும்

(ஆ) ஒட்டுமொத்த தேவையையும் ஒட்டுமொத்த அளிப்பையும்

(இ) உற்பத்தியையும் செலவையும்

(ஈ) அனைத்தும் **( விடை : ஆ )**

**50. இறுதிநிலை நுகர்வு நாட்டம்**

(அ) $\frac{\Delta S}{\Delta Y}$ (ஆ) $\frac{C}{Y}$

(இ) $\frac{\Delta P}{\Delta Q}$ (ஈ) $\frac{\Delta C}{\Delta Y}$ **( விடை : ஈ )**

**51. பணக் கொள்கையை அமல்படுத்துவது**

(அ) மைய வங்கி (ஆ) மாநில அரசு

(இ) மத்திய அரசு (ஈ) தனியார்துறை **( விடை : அ )**

**52. பொதுமக்களிடம் உள்ள புழக்கப்பணம் என்பது**

(அ) M1 (ஆ) M2 (இ) M3 (ஈ) M4 **( விடை : அ )**

**53. வங்கி வீதம் எப்போது உயர்த்தப்படுகிறது**

(அ) பணவாட்டம் (ஆ) விலை நிலையாக இருத்தல்

(இ) வேலையின்மை (ஈ) பணவீக்கம் **( விடை : ஈ )**

**54. பணவீக்கத்தின் போது என்ன நிகழும்**

(அ) வியாபாரிகள் இலாபம் ஈட்டுவர்

(ஆ) ஊதியம் ஈட்டுபவர் இலாபம் பெறுவர்

(இ) மாத சம்பளம் பெறுபவர் இலாபம் பெறுவர்

(ஈ) வாடகைக்கு விடுபவர் இலாபம் பெறுவர் **( விடை : அ )**

**55. விலைகள் உயரும் போது உள்ள சூழ்நிலையும் மற்றும் தேவை தேக்கமும் அழைக்கப் பெறுவது.**

(அ) செலவு-உந்து பணவீக்கம்

(ஆ) தேவை ஈர்ப்பு பணவீக்கம்

(இ) நிலைத்தன்மை பணவீக்கம்

(ஈ) கூலி உந்து பணவீக்கம் **( விடை : இ )**

**56. பொது நிதியானது, வருமானம் மற்றும் செலவுடன் தொடர்புடையது**

(அ) தனியார் துறை (ஆ) வேளாண்மைத் துறை

(இ) பொதுத் துறை (ஈ) தொழில் பிரிவு **( விடை : இ )**

**57. வரி வருவாய்**

(அ) கட்டணம் (ஆ) வரிகளின் வகைகள்

(இ) வருவாய் (ஈ) வரியற்ற வருவாய் **( விடை : ஆ )**

**58. கூட்டாட்சி குடியரசு இதனைக் கொண்டது**

(அ) மைய,மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்

(ஆ) மைய மற்றும் மாநில அரசுகள்

(இ) மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்

(ஈ) மேற்கூறிய அனைத்தும் **( விடை : அ )**

**59. அரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது**

(அ) அனுமதி (ஆ) வெகுமதியும் மற்றும் வாணிபம்

(இ) கடன் (ஈ) வரி **( விடை : ஈ )**

**60. பூஜ்ய நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ................ ஆண்டாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது**

(அ) அடிப்படை ஆண்டு (ஆ) நிதியாண்டு

(இ) புத்தாண்டு (ஈ) கல்வியாண்டு **( விடை : இ )**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. நுண்ணியல் என்பது .................. ஆகும். **( சிறிய )**
2. உற்பத்தி எனப்படுவது .................. உருவாக்குவதாகும். **( பயன்பாடுகளை )**
3. பண்டங்களுக்கு, பண்டங்களை மாற்றிக் கொள்வது .................. ஆகும்.**( பண்டமாற்று முறை )**
4. பொருளாதாரம் என்பது .................. அறிவியலாகும். **( சமூக )**
5. பலதரப்பட்ட செல்வத்திற்கு எடுத்துக்காட்டு .................. **( சமுத்திரம் ( கடல் ) )**
6. பழமைப்பொருளாதாரத்தில் அடிப்படைப் பொருளியல் பிரச்சனைகளை.................. மற்றும் .................. தீர்த்து வைக்கிறது **( பழக்கங்களும் ,மரபுகளும் )**
7. முதலாளித்துவத்தில் அனைத்துவகை பொருளாதார நடவடிக்கைகளும் .................. மையமாகக் கொண்டே செயல்படுகிறது. **( விலைக் கருவி )**
8. ஊற்பத்தி வாய்ப்பு வளைகோடு ...................எனவும் அழைக்கப்படுகிறது. **(உற்பத்தி வாய்ப்பு எல்லை )**
9. சமதர்ம பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் .................. **( சமூக / கூட்டு நலம் )**
10. கலப்புப் பொருளாதாரத்தில் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுபடுத்துவது .................. ........................ ஆகும் **( தனியார் மற்றும் பொதுத்துறை )**
11. ..................... என்பது பண்டங்களை, பணிகளை பயன்படுத்துவதாகும் **( நுகர்வு )**
12. விருப்பங்கள் என்பது .................. மற்றும் .................. ஆகும். **( போட்டியிடுபவை , ஒன்றை ஒன்று சார்ந்துள்ளவை )**
13. மார்ஷலின் பயன்பாட்டு அணுகுமுறை என்பது .................. பகுப்பாய்வாகும். **( இயல் பயன்பாட்டு ஆய்வு )**
14. இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாகும்போது மொத்த பயன்பாடு .................. ஆகும். **( உச்சம் )**
15. சமநோக்கு வளைகோடு மையத்தை நோக்கி .................. காணப்படும். **( குவிந்து )**
16. தேவைக்கோடு கீழ்நோக்கி வளைவதற்குக் காரணம் .................. **( குறைந்துசெல் இறுதிநிலை பயன்பாட்டு விதி )**
17. தனிநபர் நுகர்வு அட்டவணைகளை ஒன்று சேர்க்கும் போது .................. ஆகும். **( அங்காடித் தேவை அட்டவணை )**
18. சமுதாய அந்தஸ்துக்காக தேவைப்படும் பண்டங்கள் .................. விளைவாகும். **(வெப்ளன் விளைவு)**
19. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்......................... **( ஆல்பிரட் மார்ஷல் )**
20. விலைமாற்றத்தால் ஏற்படும் , அளிப்பு மாற்ற வீதம் ................ எனப்படும். **(அளிப்பின் நெகிழ்ச்சி )**
21. .................. அளிப்பைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். **( விலை )**
22. வேளாண்மை, தொழில் வளர்ச்சி மற்றும் பகிர்வு போன்றவை பிற .................. ஆகும். **( உப முறைகள்)**
23. .................. விலையில், எந்த சக்தியும் விலையையோ அளவையோ மாற்ற முடியாது. **( சமநிலை )**

24. நவீன பொருளியல் வல்லுநர் காலத்தை .................. மற்றும் .................. பிரித்தனர்.

**( குறுகிய காலம் , நீண்ட காலம் )**

25. அங்காடி காலத்தில் அளிப்புக்கோடு .................. **( செங்குத்தாக Y - அச்சுக்கு இணையாக )**

26. நிலமும், உழைப்பும் .................. உற்பத்திக்காரணிகள் ஆகும். **( அடிப்படை )**

27. நாடுகளின் செல்வமும் அதை உருவாக்குகின்ற காரணிகளைப் பற்றிய ஆய்வு என்ற நூலை எழுதியவர் .................. **( ஆதம் ஸ்மித் )**

28. ஓர் அங்காடியின் விரிவு .................. முறையின் அளவைத் தீர்மானிக்கும். **( வேலைப்பகுப்பு )**

29. .................. என்பது வேறு பல பண்டங்களை உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்டது. **( மூலதனம் )**

30. .................. என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும் **( உற்பத்தி சார்பு )**

31. பணச்செலவினை .................. என்றும் அழைக்கலாம். **( பெயரளவுச் செலவு )**

32. பொருளாதார இலாபம் என்பது, மொத்த வருவாய்க்கும் .................. உள்ள வேறுபாடாகும். **( பொருளாதார செலவுக்கும் )**

33. மாறாக்காரணிகள் மற்றும் மாறும் காரணிகளை .................. ல் மட்டுமே வேறுபடுத்த இயலும். **( குறுகிய காலத்தில் )**

34. மொத்த செலவு என்பது ..................... **( மொத்த மாறாச் செலவு + மொத்த மாறும் செலவு )**

35. இறுதி நிலை செலவு வளைகோடானது .................. வடிவத்தில் இருக்கும். **( U வடிவத்தில் )**

36. நிறைவுப் போட்டியில் நிறுவனங்கள் ......................... பொருளையே உற்பத்தி செய்கிறது. **( ஒத்த பண்டம் )**

37. நிறுவனத்தின் சராசரி வருவாயானது , சராசரி செலவைவிட அதிகமாக இருப்பின் அந்நிறுவனம் .................. **( அதிகபட்ச இயல்பு இலாபம் )**

38. நிறைவுப்போட்டியில் ஒரு நிறுவனம் .................. **( விலை ஏற்பவர் )**

39. முற்றுரிமைச் சக்தியின் மூலம் பொருளை வடிவமைக்கும் உரிமை .................. என்றழைக்கப்படும். **( சட்ட ரீதியான முற்றுரிமை )**

40. சில்லோர் முற்றுரிமை அங்காடியில் உள்ள நிறுவனங்கள் தங்களுக்குள்ளே முக்கியமான .................. செயல்பட வேண்டியதை உணர்ந்திருக்கும். **( ஒற்றுமையுடன் கூட்டுறவாக )**

41. இறுதிநிலை உற்பத்தி திறன் கோட்பாடு என்பது .................. பகிர்வு கோட்பாடு. **( பொதுவான )**

42. இறுதிநிலை உற்பத்தி திறன் கோட்பாடு .................. போட்டி சந்தையின் எடுகோளை அடிப்படையாகக் கொண்டது **( நிறைவு )**

43. மாற்று ஊதியம் என்பது ......................... செலவைக்குறிப்பது. **( வாய்ப்பு )**

44. பணக்கூலி என்பது .................. கூலி என்றும் அழைக்கலாம். **( பெயரளவு )**

45. அமைப்பை ஏற்படுத்துபவர் .................. **( தொழில் முயல்வோன் )**

46. நுகர்வு சார்பு என்பது .................. ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குகிறது. **( வருமானம் மற்றும் நுகர்வு )**

47. .................. என்பது வருமான மாற்றத்தினால் சேமிப்பில் ஏற்படும் மாற்ற விகிதத்தை குறிக்கும். **( இறுதிநிலை சேமிப்பு நாட்டம் )**

48. .................. 1930 ன் உலகப் பெருமந்தத்திற்கு காரணமாக அமைந்தது. **( முதலீடு வீழ்ச்சி )**

49. ..................என்பது கையிருப்பு பணம் ஆகும். **( நீர்மை விருப்பம் )**

50. ஆரம்ப முதலீட்டினால் வருமானத்தில் ஏற்படும் விரிவாக்கத்தின் விளைவு .................. விளைவு ஆகும் **( முடுக்கி )**

51. பண்டங்களை கொடுத்து பண்டங்களை வாங்குவது .................. என அழைக்கப்படுகிறது. **( பண்டமாற்று வாணிகம் )**

52. பணவாட்டம் என்பது விலைகள் .................. குறிக்கும் **( வீழ்ச்சியை )**

53. பரிமாற்றச் சமன்பாடு MV = PT என்பதை அளித்தவர் .................. **( இர்விங் பிஷர் )**

54. தாவும் பணவீக்கத்தை .......................... என்றும் அழைக்கலாம். **( மிகை வேகப் பணவீக்கம் )**

55. பணக்கொள்கை .................. கட்டுபடுத்த உதவுகிறது. **( பணவீக்கத்தை )**

56. .................. என்பது பல்வேறு வழிகளில் அரசுக்கு வரும் வருவாய். **( அரசின் நிதி )**

57. நேரடி மற்றும் விகிதாச்சார சலுகை பெறாமல் போவதை .................. என்று அழைக்கின்றோம். **( சரியீடு )**

58. வரி விதிப்பின் அடிப்படை கோட்பாட்டை .................. என்று அழைக்கின்றோம். **( வரி விதிகள் )**

59. நேரடி மற்றும் மறைமுக வரி விதிப்பு முறை .................. அடிப்படையாக கொண்டு விதிக்கப்படுகிறது. **( நிகழ்வு மாற்றம் )**

60. .................. வரி என்பது வளர்வீத வரியையும், விகிதாச்சார விதியையும் உள்ளடக்கியது ஆகும். **( மித வளர்வீத )**

## III. ஓரிரு வார்த்தைகளில் விடை தருக :

1. **பொருளாதாரத்தின் வேறு பெயர் என்ன ?**
   விடை : அரசியல் பொருளாதாரம்.
2. **எக்னா மெட்ரிக்ஸ் எனப்படுவது எந்தெந்த பாடங்களை உள்ளடக்கியது ?**
   விடை : புள்ளியல், கணக்குப்பொருளியல்.
3. **ரிக்கார்டோ எந்த அணுகுமுறையை பயன்படுத்தினார் ?**
   விடை : பகுத்தாய்வு முறை
4. **இலவச பண்டங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக ?**
   விடை : காற்று, சூரிய ஒளி.
5. **பண வருமானத்தின் வேறு பெயர் என்ன ?**
   விடை : பெயரளவு வருமானம்
6. **பழமைப்பொருளாதாரம் ஒரு தன்னிறைவுப் பொருளாதாரமா ?**
   விடை : ஆம்.
7. **முதலாளித்துவத்தில் உற்பத்தி ஏன் அதிகரிக்கப்படுகிறது ?**
   விடை : இலாப நோக்கு

**8. அளவுக்கதிகமான உற்பத்தியின் விளைவு யாது ?**

விடை : வீழ்ச்சி

**9. பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற இருநாடுகளைக் கூறுக ?**

விடை : சீனா, கியூபா.

**10. கலப்புப் பொருளாதாரத்தில் திட்டமிடுதல் உண்டா ?**

விடை : ஆம்.

**11. பயன்பாட்டை வரையறு ?**

விடை : விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தி.

**12. சம - இறுதிநிலை பயன்பாட்டிற்கு வேறு பெயர் என்ன ?**

விடை : கோன்ஸ் இரண்டாம் விதி / காசனின் இரண்டாம் விதி

**13. சமநோக்கு வளைகோடு என்றால் என்ன ?**

விடை : இரண்டு பண்டங்களின் பல்வேறு இணைப்புகள் மூலம் கிடைக்கும்.

**14. சமநோக்கு தொகுதி என்றால் என்ன ?**

விடை : இரண்டு பணடங்களுக்கான வெவ்வேறு நிலையான பயன்பாட்டை விளக்கும்.

**15. நிதிநிலைக் கோட்டிற்கு மற்றொரு பெயர் என்ன ?**

விடை : விலை விகித கோடு.

**16. பொருளாதார கோட்பாட்டின் அடிப்படை எடுகோள்கள் யாவை ?**

விடை : மற்றவை மாறாதிருக்கும் போது.

**17. செழுமையின் போதும் மந்தத்தின் போதும் தேவை எவ்வாறு மாறுபடுகிறது ?**

விடை : அதிகரிக்கும் , குறையும்

**18. புள்ளி முறையின் வாய்ப்பாடு என்ன ?**

விடை : $e_p = \dfrac{\text{தேவை வளைகோட்டின் கீழ்ப் பிரிவு}}{\text{தேவை வளைகோட்டின் மேல்ப் பிரிவு}}$

**19. வருமான தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன ?**

விடை : வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் தேவையில் ஏற்பட்ட மாற்ற அளவு.

**20. உழைப்பின் தேவை நெகிழ்வற்றதாக இருக்கும் போது ஒரு தொழிற்சங்கம் ஊதியத்தை உயர்த்த முடியுமா ?**

விடை : ஆம். ஊதியத்தை உயர்த்த முடியும்.

**21. பொது சமநிலை என்றால் என்ன ?**

விடை : மாற்றத்திற்கான சூழல் காணப்படாத நிலை.

**22. தேவைக்கோட்டினை இடம் பெயரச் செய்யும் காரணிகள் யாவை ?**

விடை : வருமானம் , சுவைகள் , பதிலிப் பண்டங்களின் விலைகள்.

**23. காலத்தின் பங்கினை அறிமுகப் படுத்தியவர் யார் ?**

விடை : ஆல்பிரட் மார்ஷல்

**24. நிலையான முதலீட்டிற்கு ஒரு உதாரணம் கொடு ?**

விடை : கனரக இயந்திரங்கள்.

**25. அங்காடிக் காலத்தின் அளிப்பு நிலையானதா ?**

விடை : ஆம்.

**26. சமுதாய மாற்றம் காணும் முகவர் யார் ?**

விடை : தொழில் முனைவோர்.

**27. அகச்சிக்கனங்கள் எவ்வாறு தோன்றுகிறது ?**

விடை : நிறுவனத்தின் உள்ளிருந்து.

**28. சம அளவு உற்பத்திக் கோட்டிற்கு வேறு பெயர் யாது ?**

விடை : சம உற்பத்திக் கோடுகள்.

**29. உற்பத்தியாளர்கள் சமநிலையை அடைய நிபந்தனை யாது ?**

விடை : $MRTS_{xy} = \frac{P_x}{P_y}$

**30. காப் - டக்லஸ் உற்பத்தி சார்பினைக் கூறுக ?**

விடை : $Q = bL^a C^{l-a}$ // $Q = bL^a C^b$

**31. சராசரி வருவாய் மாறாமல் இருக்கும் போது இறுதி வருவாயின் நிலை என்ன ?**

விடை : MR மாறாமல் இருக்கும்.

**32. இறுதி வருவாய் என்பது என்ன ?**

விடை : மொத்த வருவாயுடன் சேர்ந்த கூடுதல்.

**33. சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன ?**

விடை : இலாபமும், நஷ்டமும் இல்லா நிலைப்புள்ளி.

**34. உறைவடிவ வளைக்கோடு என்பது என்ன?**

விடை : திட்ட வளைகோடு.

**35. சராசரி செலவை எவ்வாறு கணக்கிடுவாய் ?**

விடை : TC / q.

**36. தொழிற்சாலை என்றால் என்ன ?**

விடை : பல நிறுவனங்களைக் கொண்டது.

**37. பொது பயன்பாடுகளை மேற்கொள்பவர் யார் ?**

விடை : அரசு.

**38. அரசாங்கம் முற்றுரிமையை எவ்வாறு கட்டுபடுத்தும் ?**

விடை : வரி விதிப்பு , சட்ட முறை.

**39. முற்றுரிமை போட்டியின் முக்கியமான சிறப்பியல்புகள் யாவை ?**

விடை : பண்டங்களின் வேறுபாடு.

**40. MRTP சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது ?**

விடை : 1969.

**41. ரிக்கார்டோவின் கூற்றுப்படி எல்லா நிலங்களும் வளம் பெறுகின்றன ?**

விடை : இல்லை

**42. அனைத்து நிலங்களும் சம அளவில் வளம் பொருந்திய நிலமாக இருந்தாலும், வாரம் எழுமா?**

விடை : ஆம்.

**43. ஏஜியோ வட்டி கோட்பாட்டின் ஆசிரியர் யார் ?**

விடை : போம் - போகுவர்க்

**44. இலாப - வார கோட்பாட்டின் ஆசிரியர் யார் ?**

விடை : வாக்கர்.

**45. சும்பீட்டரின் இலாப கோட்பாட்டின் பெயர் என்ன ?**

விடை : புத்தாக்கம் கோட்பாடு.

**46. இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவின் தடையில்லா வாணிப பொருளாதாரத்தை முடக்கியது யாது ?**

விடை : பெருமந்தம்.

**47. J.B சேயின் சந்தை விதியைக் கூறுக ?**
விடை : அளிப்பு அதன் தேவையை உண்டாக்கும்.

**48. வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய ஒரு பொதுக் கோட்பாட்டை உருவாக்கியவர் யார் ?**
விடை : கீன்சு.

**49. ஒட்டு மொத்த தேவையும் ஒட்டுமொத்த அளிப்பும் சந்திக்கும் புள்ளிக்கு என்ன பெயர் ?**
விடை : கீன்சு குறுக்கு.

**50. பெருக்கியின் வாய்ப்பாட்டை எழுதுக ?**
விடை : $K = \frac{1}{1 - MPC}$

**51. நாட்டின் பண அளிப்பைக் கட்டுபடுத்தும் வங்கி எது ?**
விடை : மைய வங்கி - ரிசர்வ் வங்கி.

**52. அருமைப் பணக்கொள்கை எப்பொழுது கடைபிடிக்கப்படுகிறது ?**
விடை : பணவீக்க காலத்தில்.

**53. விலையில் மாற்றமில்லாத போது ஏற்படும் பணவீக்கம் எது ?**
விடை : கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம்.

**54. “ கூலி ” குறைப்பு பணவாட்டத்திற்கு ஒரு தீர்வு ஆகுமா ?**
விடை : இல்லை.

**55. மிகை வேக பணவீக்கத்தை சந்தித்த ஒரு நாடு எது ?**
விடை : ஜெர்மனி.

**56. வரி என்பது என்ன ?**
விடை : கட்டாயம் செலுத்துதல் வேண்டும்.

**57. “ VAT ” என்றால் என்ன?**
விடை : மதிப்புக் கூட்டு வரி.

**58. விகிதாச்சாரவரி விதிப்பு முறை என்றால் என்ன ?**
விடை : ஒரே மாதிரியான வரி விதிப்பு.

**59. நிதிநிலை அறிக்கையின் வகைகள் யாவை ?**
விடை : சமநிலை , சமநிலையற்ற.

**60. பொதுக்கடன் என்பது என்ன ?**
விடை : பொதுமக்களிடம் இருந்து கடன் பெறுவது.

## IV. பொருத்துக :

**A]**

| | | | |
|---|---|---|---|
| 1. | பொருளாதாரக் கோட்பாடுகள் | - | a) ஆடம் ஸ்மித் |
| 2. | இயங்குநிலை அணுகுமுறை | - | b) வைர ஆபரணங்கள் |
| 3. | வாய்ப்புச்செலவு | - | c) நீர்மை விருப்பம் |
| 4. | தனியார் சொத்துரிமை | - | d) காலகட்டம் |
| 5. | அதிகபட்ச சமூக நன்மைகள் | - | e) வாக்கர் |
| 6. | ஆடம்பரப் பண்டங்கள் | - | f) குறைந்த வட்டி வீதம் |
| 7. | தென் ஆப்ரிக்கா | - | g) அடுத்த சிறந்த மாறுபட்ட பண்டத்தை கொடுத்தல் |
| 8. | முற்றுரிமையாளர் போட்டி | - | h) மார்ஷல் |
| 9. | புனித வரிவிதிப்பு முறை | - | i) ஹிக்ஸ் மற்றும் டால்டன் |
| 10. | கீன்சு | - | j) தலையிடாக் கொள்கை பொருளாதாரம் |
| 11. | மலிவுப் பணக் கொள்கை | - | k) வைரம் |
| 12. | எச்ச உரிமை கோட்பாடு | - | l) E.H சேம்பர்ளின் |

**B]**

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் நோபல் பரிசு | - | a) சமதர்மம் |
| 2. | தேனீர் மற்றும் காப்பி | - | b) விளம்பரங்கள் |
| 3. | நீண்ட கால அளிப்புக்கோடு | - | c) தங்கம் மற்றும் வெள்ளி |
| 4. | ஆட்சியாளரின் ஆதிக்கம் | - | d) செங்குத்து மாற்றம் / கிடை மாற்றம் |
| 5. | நீண்ட கால சராசரி செலவு வளைகோடு | - | e) ஹாலே |
| 6. | சரிவுக்கோடு | - | f) பணத்தின் வாங்கும் சக்தி |
| 7. | விருப்பங்கள் | - | g) பதலீட்டுப் பண்டங்கள் |
| 8. | சராசரி செலவு | - | h) சிறந்த வரிமுறை |
| 9. | உலக அங்காடி | - | i) அதிக நெகிழ்ச்சியுடையது |
| 10. | இடர்தாங்கும் இலாப கோட்பாடு | - | j) திட்ட வளைகோடு |
| 11. | பணத்தின் மதிப்பு | - | k) டிம்பர்கன் மற்றும பிரிஷ் |
| 12. | வளர்வீத வரி | - | l) ஓர் அலகு செலவு |

C] 1. செல்வம் - a) ஆண்டு இருப்பை விற்றுத் தீர்க்க

2. சமநோக்கு வளைகோடுகள் - b) தேவையும் அளிப்பும்

3. சந்தை சக்திகள் - c) TFC + TVC

4. விலை தேவை நேரடி உறவு - d) நிறைவுப் போட்டி

5. தள்ளுபடி விலை ( அ ) கழிவு விலை - e) கிளார்க்

6. வேலைப்பகுப்பு முறை - f) இருப்பு

7. நுகர்வோர் கோலச்சம் - g) $\frac{1}{1 - MPC}$

8. குறுகிய கால விலை - h) மார்ஷல்

9. இயங்கு நிலை இலாப கோட்பாடு - i) அளிப்புத் தேவை மற்றும் விலை

10. உடல் உழைப்பு அல்லது அறிவு உழைப்பு - j) வெப்ளன் விளைவு

11. K - k) சாதாரண தரம்

12. மொத்த செலவு - l) ஆடம் ஸ்மித்

D] 1. வருமானம் - a) மிகைத் தேவை நெகிழ்ச்சி

2. குறைந்தபட்ச உற்பத்திச் செலவு - b) TR - TC

3. பொருளாதாரக் கோட்பாடுகள் - c) கோ கோ - கோலா

4. Ed > 1 - d) C + I + G + ( X – M )

5. உற்பத்தி சார்பு - e) மார்ஷல்

6. மிகைத்தேவை - f) புதிய தொன்மைக்கால கோட்பாடு

7. இலாபம் - g) ஓட்டம்

8. தொழில் நுட்ப முற்றுரிமை - h) ஊர்ந்து செல்லும் பணவீக்கம்

9. கடன் நிதிக் கோட்பாடு - i) அதிகபட்ச நன்மை

10. ஒட்டு மொத்த தேவை - j) வருவாயும் செலவும் சமமாக இருக்கும்

11. கூலியும் விலையும் ஒன்றை ஒன்று தள்ளுகிறது - k) D > S

12. சமச்சீர் நிதிநிலை அறிக்கை - l) காப்டக்லஸ்

| | | | |
|---|---|---|---|
| E] 1. | இருபுள்ளிகளுக்கிடையே உள்ள பிரிவு | - | a) X மற்றும் Y தொடர்புடையன அல்ல |
| 2. | சமநிலை | - | b) C + S |
| 3. | தொழில் முனைவோர் ஓர் புத்தாக்கப் பணி செய்வோர் | - | c) வட்டி வீதம் |
| 4. | குறுக்குத் தேவை நெகிழ்ச்சி பூஜ்யம் | - | d) ஹாலே |
| 5. | $MC_n$ | - | e) வளைவு |
| 6. | காத்திருத்தல் வட்டிக் கோட்பாடு | - | f) அறிவுறுத்தல் |
| 7. | தேய்வு வீத வரி | - | g) விலை மற்றும் அளவின் இணை |
| 8. | கடன்தன்மைக் கோட்பாடு | - | h) தள்ளுபடியும் உதவித் தொகையும் |
| 9. | இடர்பாடுகளின் தொகுப்பு | - | i) பேராசிரியர் சும்பீட்டர் |
| 10. | கடன் அளவுக் கோட்பாடு | - | j) $TC_n - TC_{n-1}$ |
| 11. | நிதிக்கொள்கை | - | k) மார்ஷல் |
| 12. | Y | - | l) வரி விதிப்பு வீதம் குறையும். |

**பொருத்துக :**

**விடைகள்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **A)** | **1) – h;** | **2) – d;** | **3) – g;** | **4) – j;** | **5) – i;** | **6) – b;** |
| | **7) – k;** | **8) – l;** | **9) – a;** | **10) – c;** | **11) – f;** | **12) – e;** |
| **B)** | **1) – k;** | **2) – g;** | **3) – i;** | **4) – a;** | **5) – j;** | **6) – d;** |
| | **7) – b;** | **8) – l;** | **9) – c;** | **10) – e;** | **11) – f;** | **12) – h;** |
| **C)** | **1) – f;** | **2) – k;** | **3) – i;** | **4) – j;** | **5) – a;** | **6) – l;** |
| | **7) – d;** | **8) – b;** | **9) – e;** | **10) – h;** | **11) – g;** | **12) – c;** |
| **D)** | **1) – g;** | **2) – i;** | **3) – e;** | **4) – a;** | **5) – l;** | **6) – k;** |
| | **7) – b;** | **8) – c;** | **9) – f;** | **10) – d;** | **11) – h;** | **12) – j;** |
| **E)** | **1) – e;** | **2) – g;** | **3) – i;** | **4) – a;** | **5) – j;** | **6) – k;** |
| | **7) – l;** | **8) – f;** | **9) – d;** | **10) – c;** | **11) – h;** | **12) – b;** |

## பகுதி-ஆ

**V. பின்வரும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வரிகளில் விடையளிக்கவும் :**

**1. பொருளாதாரம் பற்றிய ஆல்பிரடு மார்ஷலின் இலக்கணம் யாது?**

ஆல்பிரடு மார்ஷல் "பொருளாதார கோட்பாடுகள்" என்ற நூலில் "அன்றாட வாழ்க்கையில் மனித இனத்தைப் பற்றிப் பொருளியல் ஆராய்கிறது" என்று வரையறுத்துள்ளார். "சாதாரண மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது".

**2. பொருளாதாரத்தின் முக்கியப் பிரிவுகள் யாவை?**

I) நுகர்வு II) உற்பத்தி III) பரிமாற்றம் IV) பகிர்வு V) பொதுநிதி

**3. இலவசப் பண்டங்கள் மற்றும் பொருளாதாரப் பண்டங்களை வேறுபடுத்துக?**

I) இயற்கையின் கொடைகளான காற்றும், சூரிய ஒளியும் இலவசப் பண்டங்களாகும். அவை சந்தையில் விலை பெறுவது இல்லை.

II) பொருளாதாரப் பண்டங்களுக்குச் சந்தையில் விலை கொடுக்க வேண்டும்.

**4. எந்த ஒரு சமுதாயத்திலும் காணப்படும் அடிப்படைப் பிரச்சனைகள் யாவை?**

ஒவ்வொரு சமுதாயத்திலும் காணப்படும் அடிப்படைப்பிரச்சனைகளாவன:

I) என்ன உற்பத்தி செய்ய வேண்டும்?

II) எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும்?

III) யாருக்கு உற்பத்தி செய்ய வேண்டும்?

**5. பொதுவான பொருளாதார முறைகளின் பெயர்களைக் கூறுக?**

பொதுவான பொருளாதார முறைகளாவன :

I) பழமைப் பொருளாதாரம் (Traditional Economy )

II) முதலாளித்துவ / அங்காடிப் பொருளாதாரம் (Capitalist Economy )

III) பொதுவுடைமை/கட்டளைப் பொருளாதாரம் (Socialist Economy ) மற்றும்

IV) கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy )

**6. பொதுவுடைமையின் அடிப்படைச் சிறப்பம்சங்களைக் கூறுக ?**

I) சமுதாய நலம்.

II) தனியார் சொத்துரிமை வரையறுக்கப்பட்டது.

III) மைய திட்டம் குழுவால் தீர்மானிக்கப்படுகிறது.

IV) அங்காடியின் பங்கு மிகக் குறைந்த அளவு.

**7. இந்தியப் பொருளாதாரம் கலப்பு பொருளாதாரமா? விவரி.**

ஆம். தனியார் துறையும், பொதுத்துறையும் சேர்ந்து இயங்குவது கலப்பு பொருளாதாரமாகும். என்ன உற்பத்தி செய்வது? எப்படி? யாருக்காக? என்ற அனைத்து முடிவுகளும் அரசே மேற்கொள்கிறது.

**8. வாய்ப்புச்செலவு என்றால் என்ன?**

”வாய்ப்புச் செலவு” என்பது சில வாய்ப்புகளை இழப்பதால் ஏற்படும் செலவாகும். “ வாய்ப்புச் செலவு ” என்பது அடுத்த தகுந்த மதிப்புடைய மாற்றுப்பண்டங்களின் மதிப்பையே குறிப்பிடுவதாகும்.

கணக்குச் செலவிற்கும் பொருளாதாரச் செலவிற்கும் உள்ள முக்கியமான வேறுபாடே வாய்ப்புச் செலவு ஆகும்.

**9. விருப்பங்களுக்கான காரணங்கள் யாவை ?**

விருப்பங்களுக்கான காரணங்களாவன :

I) விருப்பங்கள் எளிய உளவியல் காரணங்களால் தோன்றுகிறது.

II) விருப்பங்கள் சமூகக் காரணங்களால் தோன்றும்.

III) பழக்கவழக்கங்களால் விருப்பங்கள் தோன்றும்.

IV) விளம்பரங்களால் விருப்பங்கள் தோன்றும்.

**10. பண்டங்களின் வகைகள் யாவை ?**

பண்டங்களின் வகைகளாவன :

I) இன்றியமையாத பண்டங்கள்.

II) வசதிப் பண்டங்கள். மற்றும்,

III) ஆடம்பரப் பண்டங்கள்.

**11. இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் இலக்கணத்தை வறையறுக்கவும்?**

ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது.

**12. சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை ?**

சமநோக்கு வளைகோட்டின் பண்புகளாவன :

I) எல்லா சமநோக்கு வளைகோடுகளும் வலப்புறமாக , கீழ்நோக்கிச் செல்லும்.

II) சமநோக்கு வளைகோடுகள் குவிந்தநிலையில் அமையும்.

III) இரண்டு சமநோக்கு வளைகோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.

**13. மார்ஷலின் கூற்றுப்படி “நுகர்வோர் உபரி”யைக் கூறுக.**

“ ஒரு பொருளை வாங்காமல் இருப்பதைவிட, வாங்குவதே நல்லது என்று முடிவு செய்து, கொடுக்க நினைக்கும் விலைக்கும் நுகர்பவர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம் எனப்படும் ”.

**14. தேவையைத் தீர்மானிக்கும் காரணிகளை வகைப்படுத்துக.**

பிற பொருட்களின் விலை, நுகர்வோரது வருமானம், அவரது சுவைகள், தேர்ந்தெடுத்தல், நுகர்வோரின் செல்வம்.

**15. தேவைக்கோடானது ஏன் கீழ்நோக்கி செல்கிறது ?**

தேவைக்கோடு சரிவதற்குக் காரணம், குறைந்து செல் இறுதி நிலை பயன்பாட்டு விதி. பண்டங்கள் கூடுதலாக நுகர்வதனால்,பயன்பாடானது குறைந்து செல்கிறது. தேவைக்கோடானது சரிவதற்குக் காரணம், இறுதிநிலை பயன்பாட்டுக்கோடு குறைந்து செல்வதாயாகும்.

**16. தேவை நெகிழ்ச்சியின் வகைகள் யாவை?**

தேவை நெகிழ்ச்சியை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் :

அ) விலைத்தேவை நெகிழ்ச்சி.

ஆ) வருமான தெவை நெகிழ்ச்சி.

இ) குறுக்கு தேவை நெகிழ்ச்சி (அ) பின்னிய தேவை நெகிழ்ச்சி.

**17. சமநிலை விலை என்றால் என்ன ?**

வாங்குபவர்கள் வாங்க விரும்பும் அளவும், விற்பவர் விற்க விரும்பும் அளவும் சமமாகும். இவ்விலையே "சமநிலை விலை" என்று அழைக்கப்படுகிறது. இவ்விலை தேவை வளைகோடும் அளிப்பு வளைகோடும் ஒன்றை ஒன்று வெட்டும் ( சந்திக்கும் ) புள்ளியிலிருந்து தோன்றுகிறது.

**18. நீண்ட காலம், குறுகிய காலம் - வேறுபடுத்துக.**

ஒரு நிறுவனத்தின் குறகிய காலம் என்பது உள்ளீட்டுப் பொருள்களில் ஏதேனும் ஒன்றை மாறாத உள்ளீடாக வைத்துக் கொள்ளும் கால அளவைக் குறிக்கும். நீண்டகாலம் எனப்படுவது அனைத்து உள்ளீட்டுப் பொருள்களையும் மாற்றிக்கொள்ளக் கூடிய காலகட்டத்தை குறிக்கும்.

**19. அங்காடிக் காலம் - சிறு குறிப்பு வரைக .**

அங்காடிக்காலம் என்பது , தேவையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப அளிப்பில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாத நிலையைக் குறிக்கும்.

**20. பயன்பாட்டின் வகைகளைக் கூறுக ?**

அ) வடிவப் பயன்பாடு

ஆ) காலப் பயன்பாடு

இ) இடப் பயன்பாடு

ஈ) உடைமைப் பயன்பாடு.

**21. உழைப்பு என்றால் என்ன?**

உற்பத்திப்பாதையில் உழைப்பு என்பது மனித இடுபொருள் ஆகும். " ஒரு பணியை ஒருவர் செய்திடுவதால் , அவருக்கு கிடைக்கும் மனநிறைவோடு மட்டுமின்றி அதனை செய்வதற்காக கைமாறு எதிர்பார்த்து மனிதன் தன் உடல் அல்லது அறிவை முழமையாகவோ அல்லது பகுதியாகவோ பயன்படுத்தி, மேற்கொள்ளும் கடும் முயற்சியே " என ஆல்பிரட் மார்ஷல் கூறுகிறார்.

**22. வேலைப் பகுப்பு முறை என்பதன் பொருள் யாது?**

ஒரு உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே வேலைப் பகுப்பு முறை எனப்படும்.

**23. மூலதனத்தின் வடிவங்கள் யாவை?**

மூலதனத்தின் வகைகளாவன:

அ) பருமப் பொருள் முலதனம்

ஆ) பண மூலதனம்

இ) மனித மூலதனம்

**24. இறுதி நிலைச் செலவு என்றால் என்ன?**

ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில், ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலை செலவு என்று வரையறை செய்யப்படுகின்றது.

**25. மாற்று ஊதியம் என்பது யாது ?**

மாற்று வருவாய் என்பது ஒரு உற்பத்தி காரணியை, அடுத்த சிறந்த உற்பத்தியில் ஈடுபடுத்தும் பொழுது கிடைக்கும் வருவாயாகும்.

**26. வாழ்க்கைத் தர கூலிக் கோட்பாடு என்பது யாது ?**

"கூலியானது தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டது". வாழ்க்கைத் தரத்திற்கும் கூலிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது உண்மை. ஆனால் எது காரணி, எது விளைவு என்று கூறுவது சிறிது கடினமாகும்.

**27. நீர்மை விருப்ப கோட்பாட்டின் மூன்று நோக்கங்கள் யாவை ?**

அ) பரிமாற்ற நோக்கம்

ஆ) முன்னெச்சரிக்கை நோக்கம்

இ) ஊக வாணிப நோக்கம்.

**28. உறுதித் தேவை என்றால் என்ன ?**

உறுதித் தேவை என்பது வாங்கும் திறன் மற்றும் செலவழித்தலில் நாட்டம் கொண்ட தனிமனிதர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் பற்றியதாகும்.

**29. ஒட்டு மொத்த தேவை எந்த இரு காரணிகளைச் சார்ந்தது?**

அ) நுகர்ச்சி நாட்டம் மற்றும்

ஆ) முதலீட்டுத் தூண்டல்.

**30. பெருக்கி - குறிப்பு வரைக.**

வருமானம் மற்றும் வேலை வாய்ப்பைத் தீர்மானிக்கும் காரணி "பெருக்கி" ஆகும். "பெருக்கி" என்பதன் கருத்து ஆரம்ப முதலீடு மற்றும் நாட்டு வருமானத்தில் இறுதி உயர்வு ஆகியவற்றுக்கிடையே உள்ள உறவை உணர்த்துகிறது.

**31. பணத்தின் இலக்கணத்தை கூறுக.**

பண்ட பரிமாற்றத்தில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அளவுகோலாகப் பயன்படுவதும், மதிப்பின் நிலைக்களனாகப் பயன்படுத்துவதும் பணமாகும் என்று கிரௌதர் கூறுகின்றார்.

அல்லது

"பணம் எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவே பணம"-வாக்கர்

**32. பணக்கொள்கையின் இலக்கணத்தைத் தருக.**

" பணக்கொள்கை என்பது பொருளாதார கொள்கையின் நோக்கங்களை அடைய பண அளிப்பு மற்றும் பணத்தை உற்பத்தி செய்ய ஆகும் செலவுகளை கட்டுப்படுத்த மைய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும் " என்று எட்வர்டு சாபிரோ கூறியுள்ளார்.

**33. கடன் அளவுக் கட்டுப்பாட்டின் கருவிகள் யாவை?**

கடன்நிதி அளவுக் கட்டுப்பாட்டு முறைகளாவன :

அ) வங்கி வட்டிவீதம்,

ஆ) ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுதல், மற்றும்

இ) வெளிச் சந்தை நடவடிக்கைகள் ஆகியனவாகும்.

**34. பொது நிதிக்கு இலக்கணம் தருக.**

**போராசிரியர் டால்டன் :** "பொது நிதி என்பது அரசின் வருவாய், மற்றும் செலவினங்களைப் பற்றியதாகும். இவைகள் ஒன்றோடொன்று சரி செய்து கொள்ளும்.

அல்லது

**பேராசிரியர் பின்லே சிராஸ் :** " பொது நிதி என்பது அரசின் செலவின கொள்கையையும், நிதி பெருக்கத்தையும் பற்றியதே ஆகும்" என வரையறை தந்துள்ளார்.

**35. பொது நிதியின் பாடப் பொருள் என்ன?**

பொது நிதியின் பாடப் பொருள் பின்வருமாறு :

( I ) பொதுச் செலவு.

( II ) பொது வருவாய்

( III ) பொதுக்கடன்

( IV ) நிதி நிருவாகம், மற்றும்

( V ) கூட்டாட்சி முறை ( மத்திய - மாநில நிதி உறவுகள் ).

**36. ஆடம் ஸ்மித்தின் புனித வரி விதிப்புக் கொள்கை என்ன?**

ஆடம் ஸ்மித்தின் வரி விதிப்புக் கொள்கைகள் பின்வருமாறு :

( I ) சமத்துவ விதி

( II ) தெளிவு விதி

( III ) வசதி விதி

( IV ) சிக்கன விதி.

**37. வரிகளின் வகைகள் என்னென்ன?**

வரிகளின் வகைகள் பின்வருமாறு :

( I ) நேர்முக மற்றும் மறைமுக வரிகள்.

( II ) விகித வரிவிதிப்பு முறை, வளர் வீத முறை, தேய்வு வீதமுறை, மிதவளர் வீத முறை.

( III ) மதிப்புகூட்டு வரி ( VAT ) மற்றும்

( IV ) ஒன்று (அ) பலதரப்பட்ட வரிகள் ஆகியனவாகும்.

**38. "பூஜ்ஜிய " நிதிநிலை அறிக்கை என்றால் என்ன?**

ஒவ்வொரு ஆண்டும், ஒரு புதிய ஆண்டாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கடந்த சில நிகழ்வுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. இத்திட்டம் பூஜ்ஜியத்தை அடிப்படையாகக் கொண்டு, முழுமையானதாகவும், புதிதானதாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**VI. பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்கவும் :**

**1. முதலாளித்துவத்தின் சிறப்புப் பண்புகளை விளக்குக.**

முதலாளித்துவத்தின் சிறப்புப் பண்புகளாவன :

**அ) தனியார் சொத்துரிமை :** தனி நபர்கள் சொத்து வாங்கவும், சொந்தமாக்கி கொள்ளவும் உரிமை உண்டு. வரையறையின்றி எவ்வளவு சொத்துக்களை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்.

**ஆ) இலாபநோக்கம் :** இலாபநோக்கு மட்டுமே அங்காடிப் பொருளாதாரத்தின் முக்கியச் செயல்பாடாகும். பெருமளவு இலாபங்களைத் திரட்டவேண்டுமென்பதால் தனி மனிதன் அதிக இடர்பாடுகளை மேற்கொண்டு உற்பத்தி முடிவுகளை மேற்கொள்வான்.

**இ) தெரிவு மேற்கொள்ளும் சுதந்திரம் :** என்ன பொருளை உற்பத்தி செய்வது என்பதை உற்பத்தியாளரே மேற்கொள்கிறார். தீர்மானிப்பதில் சுதந்திரம் பெற்றுள்ளார்.

**ஈ ) அங்காடிச் சக்திகள் :** அங்காடிச் சக்திகளாவன தேவை, அளிப்பு மற்றும் விலை ஆகியவை, இம்முறையை நெறிப்படுத்தும் குறியீடுகள் ஆகும். உற்பத்தி,நுகர்வு மற்றும் பகிர்வு ஆகியவற்றுக்கான வினாக்கள் அங்காடிச் சக்திகளைப் பொருத்தே தீர்மானிக்கப்படுகிறது.

**உ) அரசின் குறைந்தபட்ச செயல்பாடு :** குறைந்தபட்ச அளவான அரசின் பங்கானது சில முக்கியமான பணிகளைச் செய்யவே வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது, அங்காடியை ஒழுங்குபடுத்துதல், பாதுகாப்பு, அயல்நாட்டுக் கொள்கை, பணம் போன்றவைகளே அப்பணிகளாகும்.

**2. சமதர்ம பொருளாதாரத்தின் நன்மைகளை விளக்குக.**

**அ. வளங்களை திறம்பட மேம்படுத்துதல் :** இலாப அளவைக் கணக்கில் கொள்ளாமல் வளங்களைத் திறம்படப் பயன்படுத்திச் சமதாயத்திற்குப் பயனுள்ள பண்டங்களைத் தயாரிப்பதால் போட்டியினால் எதையும் வீணாக்காமல் உற்பத்தி கூட்டப்படுகின்றது.

**ஆ. சமுதாய நலன் :** அரசு ஆடம்பரப் பண்டங்களுக்குப் பதிலாக அடிப்படை ஆதாரப் பண்டங்களையே உற்பத்தி செய்வதில் கருத்தாக உள்ளது. அரசு இலவசக் கல்வியையும், மலிவான ஆனால் சூழலுக்கு ஏற்ற வீட்டு வசதியையும், பொது சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பையும் மக்களுக்காகச் செய்து தருகிறது.

**இ. முற்றுரிமையின்மை :** அரசு ஒரு முற்றுரிமையாக இங்கு செயல்பட்ட போதிலும் தரமான பொருட்களை நேரிய விலையில் உற்பத்தி செய்கிறது.

**ஈ. அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன :** அடிப்படை மனிதத் தேவைகளான தண்ணீர், கல்வி, உடல் நலம், சமுதாயப் பாதுகாப்பு ஆகியவை அளிக்கப்படுகின்றன.

**உ. ஏற்றத்தாழ்வின்மை :** செல்வம் சேர்க்கும் வாய்ப்பில்லை . பொதுவுடைமை முறையில் பெருமளவு ஏற்றத்தாழ்வு தடுக்கப்படுகிறது.

3. **கலப்புப் பொருளாதாரத்தின் நன்மை தீமைகளை விவரி.**

**அ. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மைகள் :**

**1. திறமையான வளப்பயன்பாடு :** வளங்கள் முழுவதும் திறமையான வகையில் பயன்படுத்தப்படுகின்றன. வளங்கள் சரியான வகையில் ஒதுக்கீடு செய்யப்படவில்லையெனில் அரசு அதனைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகிறது.

**2. நிர்வகிக்கப்பட்ட விலை :** கிடைப்பருமை பண்டங்களுக்கு அரசே விலையை நிர்ணயம் செய்வதோடு அல்லாமல் நியாய விலை கடைகள் முலம் அவற்றை வழங்குகிறது.

**3.சமூக நலன் :** கலப்புப்பொருளாதாரத்தில் திட்டமிடல் மையப்படுத்தப்படுவதால் ஒட்டுமொத்த சமூக நலன் நிலவுகிறது. புத்தாக்கத்திற்காகப் பணியாளர்களுக்கு வெகுமதியும், ஊக்க ஊதியமும் வழங்கப்படுகிறது.

**ஆ. கலப்புப் பொருளாதாரத்தின் தீமைகள் :**

**1. ஒருங்கிணைப்பின்மை :** கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறையும் அரசுத்துறையும் ஒருங்கிணைந்து செயல்படுதல் அரிது. உள்கட்டமைப்புக்கு ( Infrastucture ) அரசுத்துறை அதிக அளவு பொது வளங்களைச் செலவிட நேரிடுகிறது. தனியார் துறையோ அரசுத்துறையால் ஏற்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி அதிக இலாபம் பெற முயற்சிக்கின்றது.

**2. மெதுவான வேலையில் மந்தத்தன்மையும் காலதாமதமும் :** அரசுத்துறை , திறமையற்ற முறையில் செயல்பட வாய்ப்புள்ளது.. வேலையில் ஊக்கமின்மையும், கையூட்டும் ( corruption ) நிகழ்கிறது.

**3. பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் :** ஒருபுறம், தனியார் துறை அரசு விதிக்கும் எவ்வித கட்டுப்பாடுகளையும் செயல்படுத்துவதில்லை. மறுபுறம் பொதுத்துறை எந்தவித கட்டுப்பாடுகளையும் ஏற்று செயல்படுத்துவதில்லை.

4. **தேவைக்கோடு இடம் பெயர்தலை வரைபடத்துடன் விளக்குக.**

**அ. தேவையைத் தீர்மானிக்கும் காரணிகள் :** தேவையைப் பாதிக்கும் மற்ற காரணிகளை தேவையைத் தீர்மானிக்கும் காரணிகள் என்றும் கூறலாம். அவையாவன : நுகர்வோரின் வருமானம், சுவை,விருப்பம்,பதிலிப் பண்டங்களின் விலைகள் போன்றவைகளாகும். இக்காரணிகளின் மாற்றம் விலையில் எவ்வித மாற்றம் இல்லாவிட்டாலும் தேவையை மாற்றும் தன்மையுடையது. நுகர்வோரின் வருமானம் அதிகரித்தால் அதிக அளவு பண்டங்களை வாங்குவார்கள் . அதேபோல விலைமாற்றம் இல்லாவிட்டாலும் வருமானம் குறையும் போது தேவையும் குறையும்.

**ஆ. வரைபடம் :கீழக்காணும் வரைபடம் அங்காடிக்கால சமநிலை விலையினை விளக்குகிறது.**




**இ. வரைபடம் - விளக்கம் :** வரைபடத்தில் DD என்பது தேவைக்கோடு. OP என்ற விலையில் சமநிலை அடைகிறது. விற்பவரும் வாங்குவோரும் OQ அளவில் சமநிலை அடைகின்றனர். தேவையைத் தீர்மானிக்கும் காரணிகளான வருமானம், சுவையில் ஏற்படும் மாற்றம் தேவைக்கோட்டை இடம் பெயரச் செய்யும்.( உ.ம் ) நுகர்வோரின் வருமானம் குறையும் பொழுது தேவைக்கோடு DD யிலிருந்து $D_1D_1$ க்கு இடம் பெயருகிறது. புதிய சமநிலை $E_1$ ஆகும். அதே போல நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும் பொழுது தேவைக்கோடு $D_1D_1$ யிலிருந்து $D_2D_2$ க்கு இடம் பெயருகிறது. தற்பொழுது புதிய சமநிலை $E_2$ க்கு இடம் பெயருகின்றது.

**5. அளிப்புக் கோடு இடம் பெயர்தலை வரைபடத்துடன் விளக்குக.**

**அ. அளிப்பைத் தீர்மானிக்கும் காரணிகள் :** சந்தையில் அளிப்பவர் அல்லது விற்போரின் எண்ணிக்கை, உற்பத்திக் காரணிகளின் விலை போன்றவை அளிப்பைப் பாதிக்கும் காரணிகளில் அடங்கும். இக்காரணிகள் விலையில் மாற்றம் ஏற்படாவிட்டாலும் அளிப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

**ஆ. வரைபடம் :**




**இ. வரைபடம் விளக்கம் :** விலைதான் அளிப்பைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். ஆனாலும், உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு ஆகியவற்றின் விலை குறையும் பொழுது உற்பத்திச் செலவும் குறையும். இது நிறுவனங்கள் அளிப்பை அதிகரிக்க ஊக்கமளிக்கும். இது அளிப்புக் கோட்டைSS லிருந்து $S_1S_1$ க்கு இடம் பெயரச் செய்யும். அதற்கு மாறாக உற்பத்திக் காரணிகளின் விலை ஏற்றம் உற்பத்திச் செலவை அதிகரித்து அளிப்புக் கோட்டை SS லிருந்து $S_2S_2$ க்கு இடம் பெயரச் செய்யும். இரண்டு நிலைகளிலும் சமநிலை E லிருந்து, முறையே $E_1$ அல்லது $E_2$ க்கு இடம் பெயருகிறது.

**6. அங்காடிக் காலத்தில் சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?**

**அ. அங்காடிக் காலம் :** அங்காடிக் காலம் என்பது, தேவையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப, அளிப்பில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாத நிலையைக் குறிக்கும். அங்காடி காலத்தில் அளிப்பின் அளவில் மாற்றம் நிகழாது. இக்காலத்தில் தேவையில் மாற்றம் ஏற்படக்கூடும்.

**ஆ. வரைபடம் :** கீழ்காணும் வரைபடம் அங்காடிக்கால சமநிலை விலையை விளக்குகிறது.




**இ. வரைபடம் - விளக்கம் :** அங்காடிக் காலத்தில் அளிப்பு நிலையானதாக இருப்பதால் அது SMP என்ற **செங்குத்துக் கோடாக அமைந்துள்ளது.**இதனை **நெகிழ்ச்சியற்ற அளிப்புக் கோடு** எனலாம். தேவை அதிகரிக்கும் போது ( DD to $D_1D_1$ ) விலையானது P யிலிருந்து $P_1$ ஆக அதிகரிக்கிறது. அதே போன்று தேவையானதுDD யிலிருந்து $D_2D_2$ ஆக குறையும் போது, விலையானது P யிலிருந்து $P_2$ ஆக குறைகிறது. காய்கறிகள், பழங்கள்,மலர்கள் போன்ற அழுகும் பொருள்கள் அங்காடிக்காலத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பண்டிகை காலங்களில் வாழைப்பழத்திற்கான தேவை அதிகரிக்கும் போது, அதன் விலையும் அதிகரிக்கும். ஏனெனில் அளிப்பினை உடனடியாக அதிகரிக்க முடியாது. எனவே அங்காடிக் காலத்தில் தேவையே, சமநிலை விலையை தீர்மானிக்கிறது .

**7. வேலைப் பகுப்பு முறையின் சிறப்புகளையும், குறைகளையும் விளக்குக.**

**அ. வேலைப்பகுப்பு முறையின் நன்மைகள் :**

(i) ஒரு தொழிலாளி மீண்டும் மீண்டும் ஒன்றை மட்டும் செய்வதால் அத்தொழில் முறையில் அவருடைய திறமை அதிகரிக்கின்றது.

(ii) வேலைப்பகுப்பு முறை நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக பயன்படுத்துவற்கு வழி வகுக்கிறது. உதரணமாக கம்பியிலாத் தந்தியின் கண்டுபிடிப்பு.

(iii) காலமும், மூலப்பொருட்களும் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**வேலைப்பகுப்பு முறையின் தீமைகள் :**

(i) ஒரே வேலையைத் திரும்ப திரும்ப செய்வதால் சுவையற்ற களிப்பற்ற வேலை தன்மையைத் தான், அவன் அடைகிறான். இது மனிதத் தன்மையை அழிக்கின்றது.

(ii) ஒரு பகுதி பணியை மட்டும் செய்வதில் மிகவும் தேர்ச்சி பெற்ற தொழிலாளி உண்மையில் ஒரு குறுகிய தேர்ச்சியை மட்டும் பெற்றவனாகி விடுகிறான். இதன் விளைவாக, வேலை வாய்ப்பின்மை பெருகிவிடும் நிலை ஏற்படுகிறது.

(iii) கைவினைப் பொருட்கள் வளர்ச்சியினை, வேலைப் பகுப்புமுறை அழிக்கிறது. ஒரு பொருளை முழுமையாக உருவாக்கிய மனநிறைவினை, ஒரு தொழிலாளி அடைவதில்லை.

**8. மூலதனத்தின் பண்புகளை வரிசைப்படுத்தி விளக்குக.**

**மூலதனத்தின் சிறப்பியல்புகள் அல்லது பண்புகள் :**

(i) மூலதனம் ஒரு செயலற்ற உற்பத்தி காரணி ஆகும்.

(ii) மூலதனம் மனித முயற்சியால் உருவாக்கப்பட்டது.

(iii) மூலதனம் ஒரு இன்றியமையாத உற்பத்தி காரணி இல்லை. மூலதனம் இல்லாமல் உற்பத்தி நடைபெறும்.

(iv) மூலதனம் அதிகம் இயங்கும் தன்மை கொண்டது.

(v) மூலதனத்தின் அளிப்பு நெகிழுந் தன்மையுள்ளது.

(vi) மூலதனம் ஆக்கமுடையது.

(vii) மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும். ஒரு உற்பத்தி நிறுவனம் பல ஆண்டுகள் உற்பத்தியில் ஈடுபடலாம்.

(viii) மூலதனத்தைத் திரட்டுவதன் நோக்கம் எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்பதேயாகும்.

**9. AR மற்றும் MR கோடுகளின் இடையேயான உறவுகளை எழுதுக.**

**அ. சராசரி வருவாய் ( AR ) இறுநிலை வருவாய் ( MR ) வளைகோடுகளுக்கு இடையே உள்ள தொடர்பு :** சராசரி வருவாய் ( விலை ) நிலையாக இருக்கும் போது இறுதிநிலை வருவாயும் நிலையாக இருந்து இரண்டும் ஒரே வளைகோட்டில் சேர்ந்து விடும்.

**ஆ. அட்டவணை :**

| வி. செ.<br>அலகுகள் | விலை<br>(அ) சராசரி<br>வருவாய் ( AR )<br>ரூ. | TR<br>மொ. வ<br>ரூ. | MR<br>இ. வ<br>ரூ. |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 10 | 20 | 10 |
| 3 | 10 | 30 | 10 |
| 4 | 10 | 40 | 10 |
| 5 | 10 | 50 | 10 |
| 6 | 10 | 60 | 10 |

**இ. வரைபடம் :**




**ஈ. கீழ்நோக்கிச் சரிந்து செல்லும்AR மற்றும் MR :** குறைந்த விலையில் மட்டுமே ஒரு நிறுவனம் அதிகபட்சம் பொருட்களை விற்கக்கூடும். அந்நிலையில் சராசரி வருவாய் (விலை) குறைந்து கொண்டே செல்லும். AR குறையும் போது MR ம் குறையும். ஆனால் இறுதிநிலை வருவாய் சராசரி வருவாயைவிட கூடுதலாகக் குறையும். இதனால் இறுதிநிலை வருவாய் சராசரி வருவாய்க்கு கீழ் அமைந்துவிடும்.

**உ. அட்டவணை**

| வி. செ. அலகுகள் | விலை (அ) சராசரி வருவாய் ( AR ) ரூ. | TR மொ. வ ரூ. | MR இ. வ ரூ. |
|---|---|---|---|
| 1 | 10 | 10 | 10 |
| 2 | 9 | 18 | 8 |
| 3 | 8 | 24 | 6 |
| 4 | 7 | 28 | 4 |
| 5 | 6 | 30 | 2 |
| 6 | 5 | 30 | 0 |

**ஊ. வரைபடம் :**




## 10. இறுதிநிலைச் செலவினை சரியான விளக்கத்துடன் கூறுக.

**அ. இறுதிநிலைச் செலவு :** ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில், ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலை செலவு என்று வரையறை செய்யப்படுகின்றது.

ஏற்கனவே உள்ள உற்பத்தி அளவில் ஒரு அலகு உற்பத்தி அதிகரிப்பினால், மொத்த செலவில் ஏற்படும் கூடுகின்ற நிகர அளவு செலவே இறுதிநிலை செலவு என்று வரையறை செய்யப்படுகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு நிறுவனம் 100 அலகுகள் உற்பத்தி செய்கிறது. இறுதிநிலை செலவு என்பது 100 அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் மொத்த செலவிலிருந்து 99 அலகுகள் உற்பத்தி செய்ய ஆகும் செலவினை கழிப்பதால் கிடைப்பதே ஆகும். அந்நிறுவனம் 99 அலகுகளை உற்பத்தி செய்ய ரூ.9000/- மொத்த செலவாகிறது என்று வைத்துக் கொண்டால் 100

அலகுகள் உற்பத்தி செய்ய ரூ.10,000 செலவாகும் போது ரூ.1000/- இறுதிநிலை செலவாகும். அந்நிறுவனம் ஒரு அலகு பொருள் கூடுதல் உற்பத்தி செய்ய ரூ.1000/- செலவு செய்துள்ளது.

**ஆ. இறுதிநிலை செலவு வளைகோடு - வரைபடம் :** இறுதிநிலை செலவு வளைகோடு கீழ்க்கண்ட வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.




**இ. வரைபடம் விளக்கம் :** இறுதிநிலை வளைகோடு U வடிவத்தைக் கொண்டுள்ளது. இவ்வடிவத்தை மாறும் விகித விளைவு விதி தீர்மானிக்கிறது. ஏனெனில் உற்பத்தி அலகுகள் கூடும் பொழுது செலவு குறைந்து வரும்.

**11. SAC மற்றும் SMC க்கு உள்ள உறவினைக் கூறுக.**

**அ. இவற்றின் தொடர்பினை கீழ்க்கண்டவாறு அளிக்கலாம் :**




ACமற்றும் MC க்கு இடையே உள்ள தொடர்பினை கணித ரீதியில் விளக்குதல் எளிதாகும்.

i. இறுதிநிலை செலவு சராசரி செலவைவிட குறைவாக இருக்கும்போது, சராசரி செலவு குறைகின்றது.

ii. இறுதிநிலை செலவு சராசரி செலவைவிட அதிகமாக இருக்கும் போது சராசரி செலவு அதிகரிக்கின்றது.

iii. இறுதிநிலை செலவு வளைகோடு சராசரி செலவு வளைகோட்டின் தாழ்ந்த ( குறைந்த ) புள்ளியில் கீழிருந்து வெட்ட வேண்டும். இவ்வாறு சராசரி செலவின் (AC) குறைந்த புள்ளியில்MC, AC க்கு சமமாக இருக்கும்.

**12. அங்காடியின் வகைகளை சுருக்கமாக விளக்கவும் :**

**அங்காடியின் வகைகளாவன :**

**அ. இடத்தைப் பொருத்த அங்காடி :** அங்காடியை அது அமைந்திருக்கும் இடத்தைப் பொறுத்து உள்ளூர், வட்டார,தேசிய மற்றும் பன்னாட்டு அங்காடி என்று வகைப்படுத்தலாம்.

**i. உள்ளூர் அங்காடி:** உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய பொருள்களை வாங்குவோரும், விற்போரும் வர்த்தகப் பரிமாற்றம் செய்து கொள்வார்கள். அது ஒரு பகுதியிலோ அல்லது கிராமத்திலோ நடைபெறக்கூடும். இவ்வங்காடியில் அளிப்பும், தேவையும் உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப அமையும். (எ.கா) அழியும் பண்டங்களாகிய பால் மற்றும் காய்கறிகள்.

**ii. வட்டார அங்காடி:** ஒரு வட்டாரத்திற்குள் தேவைப்படும் மற்றும் அளிக்கப்படும் பொருள்களின் அளவைக் குறிப்பது வட்டார அங்காடி ஆகும்.

**iii. தேசிய அங்காடி:** ஒரு நாடு முழுவதிலும் தேவைப்படும் மற்றும் அளிக்கப்படும் பொருள்களின் அளவைக் குறிப்பது தேசிய அங்காடி ஆகும்.

**iv. பன்னாட்டு அங்காடி:** உலகம் முழுவதும் ஒரு பண்டம் விற்று வாங்கப்படுமானால் அது உலக அங்காடி எனப்படும். ( எ.கா) பொன்,வெள்ளி, செல்போன்கள்.

**ஆ. நேரம்சார் அங்காடி :** காலத்தினை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் மார்ஷல் அங்காடியை வகைப்படுத்தியுள்ளார். காலத்தை மிக குறுகிய காலம், குறுகிய காலம் மற்றும் நீண்ட காலம் என்று மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார்.

**இ. போட்டியின் அடிப்படையில் அங்காடிகள் :** இவ்வகையான அங்காடிகள் விற்பவரின் எண்ணிக்கையையும் பொருளின் தன்மையையும் பொறுத்து / சார்ந்து வகைபடுத்தப்பட்டுள்ளது. போட்டியின் அடிப்படையில் அங்காடியின் வகைகளை கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

i. **நிறைவுப்போட்டி அங்காடி :** எண்ணற்ற விற்பனையாளர் ஒருபடித்தான பண்டங்களை விற்பனை செய்தல்.

ii. **நிறைகுறைப் போட்டி அங்காடி**

iii. **முற்றுரிமை :** ஒருவர்

iv. **இருவோர் முற்றுரிமை :** இருவர்

v. **சில்லோர் முற்றுரிமை :** சிலர்

vi. **முற்றுரிமைப் போட்டி :** பலர்

13. **நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்கவும் :**

**நிறைவுப் போட்டியின் இயல்புகளும் நிபந்தனைகளும் :**

**அ. எண்ணற்ற வாங்குவோர்,விற்போர் :** இவ்வகை அங்காடியில் வாங்குவோரும் விற்போரும் எண்ணற்ற அளவில் உள்ளனர். இங்கு விலையின் மீது எவரும் ஆதிக்கம் செலுத்த முடியாது. விலையானது அங்காடியின் இரண்டு சக்திகளாகிய தேவை மற்றும் அளிப்பினால் தீர்மானிக்கப்படுகிறது. இங்கு ஒரே மாதிரியான விலை நிலவும்.

**ஆ. ஒத்த தன்மையுடைய பண்டங்கள் :** எல்லா விற்பனையாளர்களும் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப்பண்டங்களும் அதாவது பொருளின் தரம், அளவு, சுவை ஒரே தன்மையுடையதாக இருக்க வேண்டும்.

**இ. அங்காடியின் நிலை பற்றி முழுமையாக அறிந்திருத்தல் :** விற்பனையாளரும் நுகர்வோரும் அங்காடியில் நிலவும் விலையை முற்றிலுமாக அறிந்திருப்பார்கள். ஆகவே நுகர்வோர் கூடுதல் விலையை அளிக்கவோ ( அல்லது ) விற்பனையாளர் குறைந்த விலையைப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்.

**ஈ. உற்பத்தி காரணிகள் இடம் பெயரும் :** உற்பத்திக் காரணிகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மிகவும் எளியதாக இடம் பெயருகின்றன. அதிகமான வருமானம் கிடைக்கும் போது ஒரு தொழிற்சாலையிலிருந்து மற்றொரு தொழிற்சாலைக்கு இடம் பெயரும்.

**உ. போக்குவரத்து செலவு இல்லை :** அங்காடி முழுவதிலும் ஒரே விலை நிலவுவதால் , இங்கு போக்குவரத்து செலவு இல்லை. தொலைவில் உள்ள நிறுவனங்களை விட அங்காடியிள் அருகாமையில் உள்ள நிறுவனங்களுக்கு போக்குவரத்து செலவு இல்லை.

**எ. அரசின் தலையீடு இல்லை / மந்தண கூட்டின்மை :** உற்பத்தி மற்றும் விலையை, அரசு தலையிட்டு கட்டுப்படுத்த இயலாது. நுகர்வோர், விற்போரிடையே கூட்டுத்தன்மை இல்லை. அங்காடியில் நிலவும் விலையானது தேவை, அளிப்புக்கு ஏற்ப தானாகவே மாற்றிக் கொள்ளும்.

14. **முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை ?**

**முற்றுரிமையைக் கட்டுப்படுத்தம் வழிமுறைகளாவன :**

**அ. சட்டம் இயற்றுதல் :** இந்தியாவில் 1969ல் MRTP என்ற வணிகச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தினால் முற்றுரிமைச் சக்திகள் ஒரு சிலரிடம் குவிவது தடுக்கப்படுகின்றது.

**ஆ. விலை உற்பத்தியளவு கட்டுப்படுத்துதல் :** இயற்கை முற்றுரிமைகளை முறியடிக்க இந்த முறை கையாளப்படுகின்றது. இதனால் விலையையோ, பண்ட அளவையோ அல்லது இரண்டையுமோ அரசு முடிவு செய்யும்.

**இ. வரி விதித்தல் :** முற்றுரிமையின் சக்தியை குறைப்பதற்கோ, தடுப்பதற்கோ வரி விதித்தலும் கூட ஒரு கட்டுப்படுத்தும் முறையாகும்.

**ஈ. நாட்டுடைமையாக்குதல் :** பெரிய முற்றுரிமை நிறுவனங்களை நாட்டுமையாக்குவதால், நுகர்வோரை சுரண்டி வாழும் நிறுவனங்களை அரசே ஏற்று நடத்தலாம்.

**உ. நுகர்வோர் சங்கங்கள் :** நுகர்வோர் சங்கங்களை அமைக்க ஊக்குவிப்பதன் வாயிலாக நுகர்வோரது பேரசக்தியை அதிகப்படுத்தி அவரது உரிமையைப் பாதுகாத்து முற்றுரிமை வளர்ச்சியை கட்டுப்படுத்தலாம்.

**15. முற்றுரிமையாளர் போட்டியில் வீண் செலவுகளைப் பற்றி விளக்கவும் :**

**முற்றுரிமையாளர் போட்டியின் வீண் செலவுகளாவன :**

**அ. வேலையின்மை :** முற்றுரிமையாளர் போட்டியில் நிறுவனங்கள், உத்தம உற்பத்தி அளவினை விட குறைவாக உற்பத்தி செய்வதால்,**வளங்களை முழுமையாக பயன்படுத்துவதில்லை.** இதனால் வேலை இல்லா பிரச்சனை ஏற்படுகின்றது.

**ஆ. உபரி சக்தி :** உபரி சக்தி என்பது உத்தம அளவு உற்பத்திக்கும் உண்மை உற்பத்திக்கும் உள்ள வேறுபாடாகும். நீண்ட காலத்தில் இந்நிறுவனம் உத்தம அளவு உற்பத்தியைவிட குறைந்த அளவு உற்பத்தியையே செய்கின்றன.

**இ. விளம்பரம் :** முற்றுரிமை அங்காடிப் போட்டியில் உள்ள விளம்பரச் செலவு வீண் செலவாக கருதப்படுகின்றது. நிறுவனங்கள், தமது பண்டத்தை வாங்குவதற்காக நுகர்வோரை ஊக்குவிக்கும் வகையில் பணத்தைச் செலவழிக்கின்றன. இதனால் விலை உயருகின்றது. இத்தகைய செலவுகள் வீணானவையாகும்.

**ஈ. பல்வேறு விதமான பண்டங்கள் :** முற்றுரிமைப் போட்டியில் பல்வேறு பண்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. தயாரிக்கப்படும் பண்டங்களின் அளவு, மாதிரி,வண்ணம்,மனம் ஆகியவற்றை மாற்றும் போது, ஒரே விருப்பத்தை நிறைவேற்ற பல்வேறு வகையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதினால் இப்பதிலீட்டு பண்டங்களின் உற்பத்தி செலவு வீணாக கருதப்படுகின்றது. ஒரு சில வகைகள் தயாரித்தல் மட்டுமே போதுமானதாக இருக்கும்.

**உ. செயல்திறன் குறைந்த நிறுவனங்கள் :** இம்முற்றுரிமைப் போட்டியில் செயல் திறன் குறைந்த நிறுவனங்கள், இறுதிநிலை செலவைக் காட்டிலும், கூடுதலான விலையை விதிக்கின்றன. இத்தகைய நிறுவனங்கள் தொழிலில் இருந்து அகற்றப்படல் வேண்டும்.

**16. " சே " யின் அங்காடி விதியின் குறைகளைக் கூறுக.**

i. உலக பெருமந்தத்தால் "சே" விதியின் புகழ் மங்கிப் போனது.

ii. ஈட்டிய வருமானம் அனைத்தும் முதலீடு செய்யப்படுவதில்லை.

iii. இது போலவே சேமிப்பு அனைத்தும் முதலீடு செய்யப்படுவதில்லை.

iv. இவ்விதி அங்காடி பற்றிய தவறான ஆய்வின் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

v. ஒட்டு மொத்தம் என்ற தவறான கருத்தால் இது பாதிப்படைகிறது.

vi. ஒட்டு மொத்த அளிப்பும், ஒட்டு மொத்த தேவையும் எப்போதும் சமமாக இருப்பதில்லை.

vii. வட்டி வீதம் சமப்படுத்தும் காரணியல்ல.

viii. முதலாளித்துவ முறை எப்போதும் தன்னைத் தானே சரி செய்து கொள்ளாது.

ix. நிறைவுப்போட்டி என்பது உண்மையற்ற ஒரு எடுகோள் ஆகும்.

x. பொருளாதாரத்தில் " பணம் " ஒரு முக்கிய சக்தியாகும்.

xi. இவ்விதி நீண்ட காலத்திற்கு மட்டுமே பொருந்தும்.

xii. பண்ட மாற்றுப் பொருளாதாரத்திற்கு மட்டுமே " சே " விதி பொருந்தும்.

17. **கீன்சு கோட்பாட்டின் சாராம்சத்தை படம் வரைந்த விளக்குக**

**வருமானம் மற்றும் வேலைவாய்ப்பைப் பற்றிய கீன்சின்**

**தகவல் படம்**

**( Flow Chart )**

**உறுதித் தேவை = வெளியீடு = வருமானம் = வேலை வாய்ப்பு**



**18. நுகர்வோரைத் தீர்மானிக்கும் வருமானம் தவிர பிற காரணிகளைக் கூறுக.**

**நுகர்வு செய்வதற்கு வருமானம் மிக முக்கியமான காரணியாக இருப்பினும், வேறு சில காரணிகளும் நுகர்வு நாட்டத்தை மாற்றமடையச் செய்யவல்லன. அவையாவன.**

i. வருமானப் பகிர்வு,

ii. செல்வப் பகிர்வின் அளவு மற்றும் இயல்பு,

iii. மக்கள் தொகையின் வயதுப் பாகுபாடு,

iv. பணவீக்கம் அல்லது விலை அளவு,

v. அரசின் கொள்கைகள்,

vi. வட்டி வீதம்,

vii. எதிர்பார்ப்புகள்,

viii. விளம்பரங்கள்,

ix. வாழ்க்கைத்தர வளர்ச்சி மற்றும்

x. கலாச்சார மாற்றம்.

**19. கீன்சின் வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டின் எடுகோள்களை விளக்குக.**

**வருமான நிர்ணயத்தை விளக்க கீழ்க்காணும் எடுகோள்களை கீன்சு பயன்படுத்துகிறார்.**

i. இரு பிரிவினரே உள்ளனர். நுகர்வோர் ( C ) மற்றும் நிறுவனங்கள் ( I ).

ii. பொருளாதாரத்தில் அரசின் தூண்டுதல் ஏதும் இல்லை ( G ).

iii. வேறுவகையில் சொல்வதனால் அரசின் செலவு " பூஜ்ஜியம்" ஆகும். "வரிகள் ஏதும் இல்லாததால் தனிநபர் வருமானம் அனைத்தும் செலவிடக் கூடிய வருமானமேயாகும்".

iv. பொருளாதாரம் மூடப்பட்ட ( Closed one ) பொருளாதாரம் ஆகும். அயல்நாட்டு வாணிபத்தால் தூண்டுதல் ஏதும் இல்லை, ( X - M ). அதாவது X - M =பூஜ்ஜியம் ஆகும்.

v. கூலி மற்றும் விலையில் மாற்றம் ஏதும் இல்லை. (நிலையாக இருக்கும்). வேலைக்கு அமர்த்தப்படாத வளங்கள் இருப்பதால் "முழுவேலை வாய்ப்பு" நிலையை விட குறைவான நிலையே நிலவுகிறது.

vi. வட்டிவீதத்தில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

vii. "முதலீடு" தன்னிச்சையானது, எனவே விலை மட்டத்தைப் பொருத்தோ வட்டி வீதத்தைப் பொருத்தோ அது அமைவதில்லை

viii. நுகர்வுச் செலவு ஒரே நிலையானது.

**முதல் மூன்று எடுகோள்களின் காரணமாக அடிப்படை சமன்பாடு :**

$Y = C + I + G + ( X – M )$ என்றசமன்பாடுசுருக்கப்பட்டு$Y = C + I$ஆகிறது.

20. வரி விதிப்புக் கொள்கையை விவரி

**அ. வரி விதிப்பின் விதிகள் :**

i. சமத்துவ விதி,
ii. தெளிவு விதி,
iii. வசதி விதி,
iv. சிக்கன விதி.

**ஆ. சமத்துவ விதி:** இவ்விதியின்படி " ஒருவன் தன் சக்திக்கேற்ப " வரி செலுத்துவதே இதனுடைய கொள்கையாகும். வரிவிதிக்கும் போது வரி செலுத்துவோரின், சக்திகேற்ப வரி விதிக்க வேண்டும். ஏழைகள் மீது குறைவாகவும், பணக்காரர்கள் மீது அதிகமாகவும் வரி விதித்தல் வேண்டும்.

**இ. தெளிவு விதி / உறுதி விதி :** ஒவ்வொரு குடிமகனும் தான் செலுத்த வேண்டிய வரியின் அளவு, எப்பொழுது வரி செலுத்த வேண்டும், யாரிடம் செலுத்த வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

**ஈ. வசதி விதி :** வரி செலுத்துதல், வரி செலுத்துவோருக்கு வசதியாகவும் பாரம் குறைந்ததாயும் இருத்தல் வேண்டும். எ.கா. சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமான வரி.

**உ. சிக்கன விதி :** இவ்விதி வரி விதிப்பிலும் அதிக பணம் விரயமாகாமலிருக்க வேண்டும் என்ற தத்துவத்தைப் பற்றியது.

21. மாநில அரசின் முக்கிய வரி வருவாய் மற்றும் வரியற்ற வருவாய் எவை? எவை?
மாநில அரசின் முக்கிய வரி மற்றும் வரியற்ற வருவாய்கள் :

i. நில வருவாய் ( வரி , தீர்வை வசூலிப்பு உட்பட ),
ii. விற்பனை மற்றும் செய்தித்தாள் தவிர மற்ற பொருள்கள் மீதான வரிகள்,
iii. வேளாண்மை வருவாய் மற்றும் நிலம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள்,
iv. நிலம், மனைகள், கட்டிடங்கள் மீது விதிக்கப்படும் விதிகள்,
v. வேளாண்மை நிலம் சார்பான வேளாண் பண்ணை வரிகள்,
vi. மதுவகைகள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வைகள்,
vii. ஒரு மாநிலத்திலிருந்து, பிரிதொரு மாநிலத்திற்குப் பண்டங்களைக் கொண்டுவரும் போது விதிக்கப்படும் வரிகள்.
viii. கனிமப் பொருள்களின் உரிமங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்.
ix. மின்சார நுகர்வு, விற்பனை மீதான வரிகள்.
x. விலங்குகள், படகுகள்,வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்,
xi. இருப்புப்பாதை, உள்நாட்டு நீர்வழி ஆகியவற்றில் கொண்டு செல்லும் சரக்குகள், பயணிகளின் மீது விதிக்கப்படும் வரிகள்.
xii. முத்திரைத்தாள் வரிகள், நீதிமன்ற கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணங்கள்,
xiii. பொழுதுபோக்கின் மீது விதிக்கப்படும் வரிகள்,
xiv. விளம்பரங்கள், செய்தித்தாள் தவிர்த்து பிற விளம்பரங்கள் மீதான வரிகள்,
xv. தொழில்கள், வர்த்தகதம், வேலைகள் மீதான வரிகள்,
xvi. நீர்ப்பாசனம் மற்றும் காடுகள் மூலம் கிடைக்கும் வரிவருமானங்கள்,
xvii. மத்திய அரசின் மானியங்கள் மீதான வரிகள் மற்றும்
xviii. பிற வருமானங்கள், அதாவது பதிவுக்கட்டணம், வருமான வரியில், ஒரு பகுதி, சுங்கவரிகள், மற்றும் கடன்கள் மீதான வரிகள் ஆகியன.

**22. "ஆண்டு நிதிநிலை அறிக்கை" என்பதை விளக்குக. சமநிலை மற்றும் சமநிலையற்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவரிக்கவும்.**

**அ. ஆண்டு நிதிநிலை அறிக்கை :** வரவு - செலவு திட்டம் என்பது ஆண்டு நிதிநிலை அறிக்கையாகும். இது அரசின் வரவு-செலவுகளோடு கூடிய ஒரு நிதி ஆண்டிற்கான ( ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய ) அறிக்கை.

**ஆ. வரவு-செலவுத் திட்டம்-வரையறை :** "வரவு-செலவுத்திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சமமாக கணக்கிட்ட வரவு மற்றும் செலவு" என்கிறார்.

**இ. வரவு-செலவு திட்டத்தின் வகைகள் :** வரவு-செலவு திட்டம், சமநிலை வரவு-செலவுத் திட்டம் என்றும் சமனற்ற வரவு-செலவு திட்டம் எனவும் இரண்டு வகைப்படும்.

i. **சமநிலை வரவு-செலவு திட்டம் (Balanced Budjet) :** அரசின் திட்டமிடப்பட்ட செலவுகளும், வருவாயும் சமமாக இருப்பின் அது சமநிலை வரவு-செலவுத்திட்டம் எனப்படும்.

ii. **சமனற்ற வரவு-செலவுத்திட்டம் (Unbalanced Budjet) :**

சமநிலையற்ற வரவு செலவுத்திட்டம் என்பது அரசின் வருவாய், செலவை விடக் கூடினாலும் (அல்லது) அரசின் செலவு, வருவாயை விட அதிகமானாலோ இரண்டுமே சமனற்ற வரவு செலவுத்திட்டம் என்றழைக்கப்படும்.

**மிகை வரவு செலவுத் திட்டம் (அ) பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் :**

வருமானம் செலவைவிட அதிகமானால் மிகை வரவு செலவுத்திட்டம். செலவு வருவாயைவிட அதிகமானால் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

**23. "நேர்முக வரி" மற்றும் " மறைமுக வரி" யை வேற்படுத்திக் காட்டுக.**

| நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| 1. நேர்முக வரி என்பது யார் மீது வரிவிதிக்கப்பட்டதோ அவரே வரி செலுத்துவதாகும். | 1. ஒருவர் மீது விதிக்கப்பட்டு மற்றொருவர் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வரி செலுத்துவதாகும். |
| 2. வரி செலுத்துபவரே வரிச்சுமையை சுமக்க வேண்டும். | 2. வரி விதிக்கப்பட்டவர் வேறு, வரிச்சுமையை சுமப்பவர் வேறு. |
| 3. நேர்முக வரியானது பொது மக்களிடமிருந்து நேரிடையாக வசூலிக்கப்படுகிறது. | 3. மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுகிறது. |
| 4. நேர்முக வரியில் வரி ஏய்ப்பு கடினம். | 4. மறைமுக வரியில் வரி ஏய்ப்பு என்பது ஏமாற்றத்திற்குரியது. |
| 5. நேர்முக வரியில் பணச் சுமையும் உண்மைச் சுமையும் ஒருவர் மீது நிலை பெறுகிறது. | 5. இதில் விதிக்கப்படும் வரியில் தொடக்கச்சுமை வரியானது ஒருவர் மீது இருப்பினும், உண்மை வரி சுமை மற்றொருவர் மீது மாற்ற இயலும். |
| 6. எ.கா.<br>❖ வருமான வரி<br>❖ சொத்து வரி<br>❖ வெகுமதி வரி<br>❖ தீர்வை வரி | 6. எ.கா<br>❖ விற்பனை வரி<br>❖ சுங்க வரி. |

**VII. பின்வரும் வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடையளிக்கவும் :**

**1. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை?**

**விருப்பங்களின் இயல்புகள் அல்லது பண்புகள்:**

**(அ) விருப்பங்கள் எண்ணற்றவை :** ஒவ்வொரு மனிதரும் விருப்பங்களின் தொகுப்பாக உள்ளார். மனித விருப்பங்கள் எல்லையற்றவையாகும். ( Wants are unlimited ) ஒரு விருப்பம் நிறைவடைந்தவுடன் மற்றொரு விருப்பம் புதியதாக தோன்றும். மிகுந்த செல்வம் படைத்தவர்களுக்குக் கூட நிறைவு செய்யவேண்டிய விருப்பங்களின் பட்டியல் பெரிதாக இருக்கும்.

**(ஆ) விருப்பங்கள் நிறைவேறக்கூடியவை :** பொதுவாக விருப்பங்கள் எண்ணற்றவை. அனைத்து விருப்பங்களும் நிறைவேறக்கூடியவை அல்ல. ஒரு தனிப்பட்ட விருப்பத்தை முழுவதுமாக நிறைவு செய்ய முடியும். பசி எடுக்கும்போது, அவனுக்கு உணவு தேவைப்படுகிறது. சிறிதளவு பணத்தைச் செலவு செய்வதன் மூலம் உணவைப் பெறுகிறான். பசி என்னும் விருப்பம் நிறைவடைகிறது.

**(இ) விருப்பங்கள் போட்டியிடுபவை :** விருப்பங்களை நிறைவு செய்ய முயலும் போது, அவை ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன. முதலில் தெரிவு செய்ய வேண்டி, ஒரு இணை விருப்பங்கள் மற்றொரு இணை விருப்பங்களோடு போட்டியிடுகின்றன. ( உ.ம் ) ராஜு ரூ.20 வைத்திருப்பதாகக் கொள்வோம். இந்த ரூ.20ஐ பயன்படுத்தி சினிமாவிற்குச் செல்வதா பத்திரிக்கை வாங்குவதா, அல்லது காய்கறிகள் வாங்குவதா என்பதை தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

**(ஈ) விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன :** "எழுத வேண்டும்" என்ற விருப்பம், எழுதும் காகிதம், பேனா மற்றும் மை இவற்றை உள்ளடக்கியதாகும் சில விஷயங்களில், விருப்பமானது போட்டியிடுபவைகளாகவும், கூடவே சார்புடையவைகளாகவும் இருக்கும். (உ.ம்) உழைப்பு மற்றும் இயந்திரங்கள்.உழைப்பிற்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்த முடியும் ஆனால் உழைப்பின் உதவியின்றி இயந்திரத்தைப் பயன்படுத்த முடியாது.

**(உ) விருப்பங்கள் மாற்றுப் பொருளால் நிறைவு பெறுபவை :** சூடான பானம் அருந்த விரும்பினால் காபி அல்லது தேனீர் அருந்தலாம். நாம் விரும்பும் இடங்களுக்குச் செல்ல, பேருந்து அல்லது தொடர்வண்டி அல்லது வாடகை வண்டியில் செல்லலாம். இவ்வாறு நமது விருப்பத்தை பல வழிகளில் நிறைவு செய்யலாம்.

**(ஊ) விருப்பங்கள் நேரத்தால்,இடத்தால்,மனிதனுக்கு தகுந்தாற்போல் மாறக்கூடியவை :** குளிர்காலத்தில் நாம் சூடான பானமும், கோடைகாலத்தில் குளிர்ச்சியான பானமும் அருந்த விரும்புகின்றோம். இங்கிலாந்தில் உள்ள மக்கள் கம்பளி ஆடைகள் மற்றும் மழைநீர் புகாத மேற்சட்டைகளை விரும்புகிறார்கள். இந்திய மக்கள் பருத்தி ஆடையை அணிய விரும்புகின்றனர். ஆந்திர பிரதேசத்தில் உள்ள கிராமவாசிகளின் விருப்பம் மும்பையில் உள்ள தொழிலதிபரின் விருப்பத்திலிருந்து மாறுபட்டது.

**(எ) விருப்பங்கள் மீளத் தோன்றும் இயல்புடையவை :** சில விருப்பங்கள் மீண்டும் மீண்டும் தோன்றக் கூடியவை. உணவு வேண்டும் என்ற விருப்பம் உணவு உண்டவுடன் நிறைவு பெறுகிறது. சில மணி நேரங்களில் மீண்டும் இவ்விருப்பம் தோன்றும்.

**(ஏ) விருப்பங்கள் விளம்பரங்கள் மூலம் தோன்றக்கூடியவை:** சினிமா, பத்திரிக்கைகள், வானொலி, தொலைக்காட்சிகளில் தோன்றும் விளம்பரங்கள் மூலம் புதிய விருப்பங்கள் தோன்றுகின்றன. ஏற்கனவே உள்ள விருப்பங்கள் மாற்றமடைகின்றன.

**(ஐ) விருப்பங்கள் பழக்கங்களாகவும்,வழக்கங்களாகவும் மாறக்கூடியவை:** ஒரு குறிப்பிட்ட விருப்பம் தொடர்ந்து ஒரு பண்டத்தால் நிறைவேற்றப்படுமேயானால் அது பழக்கமாக மாறிவிடுகிறது. (உ.ம்) காபி, தேனீர் அருந்துதல் போன்ற விருப்பங்கள் பழக்கங்களாக மாறுகின்றன. பழக்கங்களும் விருப்பம் ஏற்படக் காரணமாகின்றன.

**2. குறைந்து செல் பயன்பாட்டு விதியினை படம் வரைந்து விளக்கம் தருக.**

**(அ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி - இலக்கணம் :** "ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்கும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது" என்று மார்ஷல் குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை விளக்குகிறார்.

**(ஆ) விதியின் கருத்து :** குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி நுகர்வோரின் சாதாரண அனுபவத்தை விளக்குகிறது. நுகர்வோர் மேலும் மேலும் ஒரு பண்டத்தை நுகர்வதால், அதிலிருந்து கிடைக்கும் கூடுதல் பயன்பாடு குறைந்து கொண்டே செல்லும். ஒரு பண்டத்தின் நுகர்வு அதிகரிக்கும் பொழுது இறுதிநிலைப்பயன்பாடு குறைந்து செல்லும் என்று இவ்விதி கூறுகின்றது. இறுதிநிலைப் பயன்பாடு குறையும் பொழுது மொத்தப் பயன்பாடானது குறைவான வேகத்தில் அதிகரிக்கும்.

**(இ) விளக்கம் :** Mr.X என்பவர் பசியோடு இருப்பதால் ஒன்றன் பின் ஒன்றாக ஆப்பிள் பழங்களைச் சாப்பிடுகிறார். அவர் அதிக பசியோடு இருப்பதால் முதல் ஆப்பிள் அதிகப் பயன்பாட்டைக் கொடுக்கிறது. இரண்டாவது ஆப்பிள் அவர் எடுத்துக்கொள்ளும் பொழுது அவரது பசியின் தன்மை குறைகிறது. ஆகவே இரண்டாவது ஆப்பிளிலிருந்து குறைவான பயன்பாட்டையே பெறுவார். அவர் தொடர்ந்து மூன்றாவது பழத்தை எடுத்துக் கொண்டால், அதிலிருந்து கிடைக்கும் பயன்பாடானது இரண்டாவது பழத்திலிருந்து கிடைக்கும் பயன்பாட்டை விட குறைவாகவே இருக்கும். இதேபோல் கூடுதல் அலகுகளிலிருந்து கிடைக்கும் இறுதிநிலை பயன்பாடானது குறைந்து செல்லும். நுகர்வோர் தொடர்ந்து அதிக பழங்களை நுகர்ந்து கொண்டே சென்றால் இறுதிநிலைப் பயன்பாடானது பூஜ்ஜியத்திற்குச் செல்லும், நுகர்வோர் மேலும் நுகர்வைத் தொடங்கினால் இறுதிநிலைப் பயன்பாடு எதிர்மறையாகி மொத்த பயன்பாடு குறையவும் தொடங்கும்.

(ஈ) மொத்த, இறுதிநிலைப்பயன்பாட்டுப் பட்டியல் :

| அளவு | மொத்த பயன்பாடு | இறுதிநிலை பயன்பாடு |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 35 | 15 |
| 3 | 45 | 10 |
| 4 | 50 | 5 |
| 5 | 50 | 0 |
| 6 | 45 | -5 |
| 7 | 35 | -10 |

(உ) வரைபடம் :




**(ஊ) மொத்த, இறுதிநிலைப் பயன்பாட்டுக் கோடு :** பட்டியல் மொத்தப் பயன்பாட்டிற்கும் இறுதிநிலை பயன்பாட்டிற்கும் உள்ள தொடர்பினை விளக்குகிறது. பட்டியலிலிருந்து, இறுதிநிலைப் பயன்பாடானது குறைந்து கொண்டே செல்கிறது என்பது தெளிவாகிறது.

மொத்தப் பயன்பாடானது அதிகரித்துக் கொண்டே செல்லும், ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு குறையத் தொடங்கும். இறுதிநிலைப் பயன்பாடு குறையும் பொழுது மொத்தப் பயன்பாடு அதிகரிக்கும். ஆகவே முதல் நான்கு அலகு பழங்களில், மொத்தப் பயன்பாடு 20 அலகிலிருந்து 50 அலகுகளாக அதிகரிக்கின்றது. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும் பொழுது மொத்தப் பயன்பாடு உச்சத்தை அடைகிறது ( 50 அலகு ). இறுதிநிலைப் பயன்பாடு எதிர்கணியத்திற்கு செல்லும் பொழுது ( 6,7 அலகுகள் ) மொத்தப் பயன்பாடானது 50 அலகுகளிலிருந்து 45 அலகுகளாகவும் , 35 அலகுகளாகவும் குறைந்து கொண்டே செல்கிறது.

**3. நுகர்வோர் உபரியை படம் வரைந்து அதனுடைய முக்கியத்துவம் மற்றும் திறனாய்வுகளை விளக்குக.**

**அ.நுகர்வோர் எச்சம் அல்லது நுகர்வோர் உபரி :** ஒரு நுகர்வோர் ரூ.250க்கு ஒரு சட்டையை வாங்க நினைக்கிறார். ஆனால் அவர் ரூ.200ஐ கொடுத்து வாங்குகின்றார். இதன் மூலம் அவருக்கு ரூ.50 மிச்சமாக உள்ளது. இதையே நுகர்வோர் எச்சம் என்று குறிப்பிடுகின்றோம்.

அதாவது ரூ.250 - ரூ.200 =ரூ.50

இங்கே ரூ.50ஐ நுகர்வோர் எச்சம் என குறிப்பிடுகிறோம்.

**(ஆ) நுகர்வோர் எச்சம் - அளவிடுதல் :**

நுகர்வோர் எச்சத்தை கீழ்க்காணும் முறையில் அளவிடலாம், அதாவது,**நுகர்வோர் எச்சம்** = **தகுவிலை - உண்மை விலை.** தகுவிலை என்பது, நுகர்வோர் வாங்கும் பொருளுக்கு கொடுக்க விரும்பும் விலையாகும். உண்மை விலை என்பது அவர் பொருளை வாங்க கொடுத்த விலையைக் குறிப்பிடுவதாகும்.

**(இ) அட்டவணை :**

**நுகர்வோர் எச்சம் அளவிடுதல்**

| **அளவீடுகள்** | **இறுதிநிலை பயன்பாடு** | **அலகுகளின் விலை** | **நுகர்வோர் எச்சம்** |
|---|---|---|---|
| (i) | (ii) | (iii) | (iv) (ii-iii) |
| 1 | 50 | 10 | 40 |
| 2 | 40 | 10 | 30 |
| 3 | 30 | 10 | 20 |
| 4 | 20 | 10 | 10 |
| 5 | 10 | 10 | 0 |
| | 150 | 50 | 100 |

**(ஈ) அட்டவணை விளக்கம் : இறுதிநிலைப் பயன்பாட்டிற்கும் (தகுவிலை) அங்காடி விலைக்கும் ( உண்மை விலை ) உள்ள வேறுபாடே நுகர்வோர் எச்சம்.** மேற்குறிப்பிட்ட அட்டவணையில், ஒவ்வொரு அலகின் எச்சமானது இறுதிநிலை பயன்பாடு கழித்தல் அங்காடி விலை என்பனவனவாகும். நுகர்வோர் எச்சமானது, எல்லா அலகுகளின் மூலம் கிடைக்கும் மொத்த பயன்பாட்டினை நுகர்வு பண்டங்களுக்கான செலவினத்தால் கழித்தால் நமக்கு நுகர்வோர் எச்சம் கிடைக்கும். அதாவது, நுகர்வோர் எச்சம் =ரூ.150 - ரூ.50 =ரூ.100. இந்த நுகர்வோர் எச்சத்தை ஒரு வரைபடம் மூலம் விளக்கலாம். இவ்வரைபடத்தில் X அச்சில் பண்டங்களின் அலகுகளும்,Y அச்சில் பயன்பாடு மற்றும் விலையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(உ) வரைபடம் :**




**நுகர்வோரின் எச்சம்**

**(ஊ) வரைபடம் விளக்கம் :** மேலே உள்ள வரைபடத்தில் MU என்பது இறுதிநிலை பயன்பாட்டின் வரிக்கோடாகும். OP என்பது விலையாகும். OM என்பது வாங்கும் பொருளின் அளவினைக் குறிக்கும். நுகர்வோர் OM அளவு பண்டத்தை வாங்கும் போது OAEM அளவு விலையைக் கொடுக்க விருப்பப்படுகின்றார். ஆனால் நுகர்வோர் OPEM அளவு பணத்தைக் கொடுத்தே அப்பொருளை வாங்குகின்றனர். எனவே நுகர்வோர் எச்சம் என்பது OAEM – OPEM = PAE ( கோடிடப்பட்ட பகுதி ) ஆகும்.

**(எ) குறைபாடுகள்:** மார்ஷல் நுகர்வோர் எச்சத்திற்கு எதிரான இரண்டு முக்கிய குறைபாடுகளை சுட்டிக் காட்டி உள்ளார். அவையாவன.

i. பயன்பாடு அளவிடக் கூடியது என்பது மார்ஷலின் கருத்து. ஆனால் உளவியல் அடிப்படையில் பயன்பாடு இருப்பதால் பயன்பாட்டை அளவிட முடியாது.

ii."பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு" நிலையானது என்ற மார்ஷலின் கருத்து உண்மையற்றதாகும்.

**(எ) நுகர்வோர் எச்சத்தின் முக்கியத்துவம் :**

i. நுகர்வோர் எச்சமானது நிதியமைச்சரின் வரிவிதிப்பு விதிகளுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

ii. நியூயார்க் நகரில் வாழும் நடுத்தரக் குடும்பத்தை சார்ந்த ஒருவர் சென்னையில் வாழும் நடுத்தரக் குடுமபத்தைச் சார்ந்த ஒருவரைக் காட்டிலும் அதிகமான அளவு நுகர்வு எச்சத்தை பெற்று அனுபவிக்கின்றார்.

**4. தேவை விதியினை விவரமாக எழுதுக.**

**அ. தேவை விதியின் அடிப்படை :** ஒரு பொருளுக்கான "தேவை" ( Demand ) என்பது - அப்பொருளை வாங்குவதற்கான விருப்பத்தையும், போதிய வாங்கும் சக்தியையும், வாங்கிவிட வேண்டும் என்ற முடிவையும் குறிக்கும். ஆனால் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்கும் ஒரு எளிய நபர் "கார்" ஒன்றை வாங்க வேண்டும் என்று விரும்பும் போது - அது வெறும் விருப்பமே அன்றி அது தேவையெனக் கருதப்பட மாட்டாது. ஏனெனில் அவரது விருப்பத்தை நிறைவு செய்து கொள்ள அவரிடம் போதிய வாங்கும் சக்தி இல்லை. அதே நேரத்தில் ஒரு பணக்காரர் கார் தனக்கு வாங்க வேண்டும் என்று விரும்பும் போது அது தேவை என பொருளியலில் கருதப்படும். ஏனெனில் அவரால் அந்த பொருளின் விலையைக் கொடுக்க முடியும். இவ்வாறு பொருளுக்கான விருப்பத்தோடு வாங்கும் சக்தியும் பின்புலமாக இருக்கும் போது பொருளியலில் அது "தேவை" என்று அழைக்கப்படும்.

**ஆ. தேவை விதியை தீர்மானிக்கும் காரணிகள் :** பிற பொருட்களின் விலை, நுகர்வோரது வருமானம், அவரது சுவைகள், தேர்ந்தெடுத்தல், நுகர்வோரின் செல்வம்.

**இ. தேவை விதி : ஆல்பிரடு மார்ஷலின் கூற்றுப்படி,**" நிறைய பண்டங்களை விற்க வேண்டுமாயின், விலை குறைவாக இருக்க வேண்டும். அவ்வாறு விலை குறைவாக இருந்தால் தான் அப்பண்டத்தைப் பலரும் வாங்குவர். வேறு விதமாகக் கூறினால் விலை குறைவதால் தேவைப்படும் பண்டத்தின் அளவு கூடுகிறது, விலை கூடுவதால் தேவை குறைகிறது ".

**ஈ. தேவைப்பட்டியல் :** ஒரு பண்டத்தின் பல்வேறு விலைகளையும் அவ்விலைகளில் ஒவ்வொன்றிற்கும் தேவையின் அளவையும் காட்டுகின்ற அட்டவணையே தேவைப்பட்டியல் என்பதாகும்.

| விலை ( ரூ ) | தேவை அளவு கி.கி |
|---|---|
| 6 | 10 |
| 5 | 20 |
| 4 | 30 |
| 3 | 40 |
| 2 | 50 |
| 1 | 60 |

**அட்டவணை தேவைப்பட்டியல் ஆகும்.** தனியொரு நுகர்வோர் பல்வேறு விலைகளில் வாங்க விரும்பும் ஒரு பண்டத்தின் பல்வேறு அளவுகளை இது சுட்டிக்காட்டுகிறது. விலையும் தேவையும் எதிர்மறையாக மாறக்கூடியது. இது தனியொரு நுகர்வோர் தேவைப்பட்டியலாகும்.

**உ. தேவை வளைகோடு :** இந்த அட்டவணையை வரைபடத்தில் தேவை வளைகோடாக வரையலாம். தேவை வளைகோடு என்பது தேவை அட்டவணையின் வரைபடமாகும்.

**வரைபடம் :**




மேற்கண்ட வரைபடத்தில் DD என்பது தேவைக்கோடு ஆகும். இத்தேவைக் கோடு இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சரிந்து செல்கிறது. விலை இறங்கிவரும் போது தேவையின் அளவு அதிகரிப்பதை இக்கோடு காட்டுகிறது.

**ஊ. தனிநபர் தேவைப் பட்டியல் :** தனி நபர் தேவைப்பட்டியலானது, ஒரு பண்டத்தின் பல்வேறு விலைகளில் வாங்க விரும்பும் பல்வேறு அளவை சுட்டிக் காட்டும் அட்டவணை.

**தனிநபர் தேவைப்பட்டியல்**

| விலை ( ரூபாய் ) | தேவை அளவு ( ஆரஞ்சு ) |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |

**எ. அங்காடித் தேவை அட்டவணை :** அங்காடித் தேவைப்பட்டியல் என்பது, அங்காடியில் உள்ள நுகர்வோர் அனைவரின் தேவை அளவுகளை ஒன்று கூட்டினால் கிடைப்பதாகும். ஆரஞ்சு பழ அங்காடியில் இரு நுகர்வோர் இருப்பதாக வைத்துக் கொண்டால், அங்காடித் தேவையானது கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்படுகிறது.

**அட்டவணை**

**இரண்டு நுகர்வோரது தேவைப்பட்டியல் மற்றும்**

**அங்காடித் தேவைப்பட்டியல்**

**தேவை அளவு**

| விலை (ஆரஞ்சு) | நுகர்வோன் 1 | நுகர்வோன் 2 | அங்காடித் தேவை |
|---|---|---|---|
| 5 | 1 | - | 1 |
| 4 | 2 | 1 | 3 |
| 3 | 3 | 2 | 5 |
| 2 | 4 | 3 | 7 |
| 1 | 5 | 4 | 9 |

**ஏ. அங்காடியில் தேவை வளைகோடு :**

அங்காடியில் விலை குறையும் போது தேவை கூடுகிறது.

**வரைபடம் :**




**ஐ. அங்காடித் தேவைக் கோட்டின் விளக்கம் :** மேற்கண்ட வரைபடத்தின் நுகர்வோர் 1, நுகர்வோர் 2 ஆகிய இரு நுகர்வோரின் தேவையளவுகளை "X" அச்சிலும் அங்காடியில் நிலவும் விலை "Y" அச்சிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு நுகர்வோரின் மொத்த தேவை, அதாவது D1+D2=DD என்ற அங்காடித் தேவைக் கோடு ஆகும்.

**5. விலைத் தேவை நெகிழ்ச்சியின் முறைகளை விவரமாக எழுதவும்**

**விலைத் தேவை நெகிழ்ச்சியை அளவிடுதல் :**

இது நான்கு முறைகளில் அளவிடப்படுகிறது.

(i) விழுக்காட்டு முறை.

(ii) புள்ளிமுறை அல்லது சரிவு முறை

(iii) மொத்த செலவு முறை

(iv) வில் முறை என்பவையாகும்.

**(அ). விழுக்காட்டு முறை :** விழுக்காட்டளவில் தேவை மாற்றத்தை விழுக்காட்டளவில் விலை மாற்றத்தால் வகுப்பதன் வாயிலாக தேவை நெகிழ்ச்சியை அளவிடலாம்.

$$e_P = \frac{\%\Delta\ q}{\%\Delta\ p}$$

(எ.கா) அரிசியின் விலை 10 சதவிகிதம் உயரும் போது அரிசியின் தேவை 15 சதவிகிதமாக குறைந்தால் விலைத் தேவை நெகிழ்ச்சி ($e_P$ ) என்பது $e_P = \frac{15}{10} = 1.5$

**(ஆ) புள்ளி முறை :** நேராக அமைந்துள்ள தேவைக் கோட்டின் மீது உள்ள ஒரு குறிப்பிட்ட புள்ளியில், விலைத் தேவை நெகிழ்ச்சியைக் கணக்கிடலாம்.

புள்ளி முறையில் விலைத் தேவை நெகிழ்ச்சியின் சூத்திரமாவது :

விலைத் தேவை நெகிழ்ச்சி = தேவைக் கோட்டின் கீழ்பகுதி / தேவைக் கோட்டின் மேல்பகுதி

**வரைபடம்:**




சரியாக AB என்கிற தேவைக் கோட்டின் (மைய) நடுப்புள்ளியில்,

(i) அதாவது் "E" என்கிற புள்ளியில் விலைத் தேவை நெகிழ்ச்சியானது

At E, $e_p$= EB/EA = 2/2 = 1 (i.e)ep = 1

(ii) விலைத்தேவை நெகிழ்ச்சி "D" என்ற புள்ளியில்

= DB / DA = 1/3 = 0.3 ep<1

(iii) விலைத்தேவை நெகிழ்ச்சி "C" என்ற புள்ளியில்

= ep = CB / CA

=3/1 = 3 ep>1

(iv) விலைத் தேவை நெகிழ்ச்சி "B" என்ற புள்ளியில்

=0/AB = 0/4 = 0

(v) விலைத்தேவை நெகிழ்ச்சி "A" என்ற புள்ளியில்

=AB/0 = 4/0 = ∞

**(இ) மொத்த செலவு முறை :** ஒரு பண்டத்தின் விலை மாற்றத்தினால், ஏற்படும் மாற்றத்தினைக் கொண்டு விலைத்தேவை நெகிழ்ச்சியைக் கணக்கிடலாம்.

(i) ஒரு பண்டத்தின் விலை குறையும் போது, அதை நுகரும் நுகர்வோரின் அப்பண்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு அல்லது அதன் மொத்த செலவு அதிகரித்தால் அது மிகை நெகிழ்ச்சியுள்ள தேவை எனப்படும். $E_P > 1$.

(ii) ஒரு பண்டத்தின் விலை குறையும் போது அதனை நுகர்வோரின் அப்பண்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு அல்லது அதன் மொத்த செலவு குறைந்தால் அது குறை நெகிழ்ச்சியுள்ள தேவை எனப்படும். $E_P < 1$.

(iii) ஒரு பண்டத்தின் விலை குறையும்போது அந்நுகர்வோரின் அப்பண்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு அல்லது அதன் மொத்த செலவில் மாற்றம் ஏற்படாமலிருந்தால் அது ஒருமைத் தேவை நெகிழ்ச்சி எனப்படும். $E_P = 1$.

**(இ) வில் முறை :** ஒரு தேவை வளைகோட்டின் இரண்டு புள்ளிகளுக்கிடையே உள்ள பகுதியே வில் எனப்படும்.

ஒரு பண்டத்தின், விலை மாற்றம் பெருமளவில் இருந்தால் விலைத்தேவை நெகிழ்ச்சியை கணக்கிட இவ்வில் முறையைக் கையாளலாம்.

இவ்வில் முறையை வரைபடம் மூலம் விளக்கலாம்.

**வரைபடம் :**



மேற்கண்ட வரைபடத்தில், வில் நெகிழ்ச்சியை A & B என்ற தேவைக் கோட்டின் இரண்டு புள்ளிகளுக்கிடையே கணக்கிடலாம். இதற்கு OP1 மற்றும் OP2 - இந்த இரண்டு விலைகளுக்கிடையே சராசரியைக் கணக்கிட்டு மற்றும் இரண்டு தேவை அளவுகளின் சராசரியையும் கணக்கிடல் வேண்டும். இதுவே வில் நெகிழ்ச்சியாகும்.

**6. குறுகிய காலத்தில், நிறைவுப் போட்டியில், விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன?**

**அ. நிறைவுப் போட்டியில் குறுகிய காலத்தில் விலை, பண்டத்தின் உற்பத்தி நிர்ணயம் :**

(i)நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் விலை ஏற்பவராக உள்ளதால், தனது உற்பத்தி வெளியீட்டை அதற்கு ஏற்றார் போல சரி செய்து உச்ச இலாபத்தை அடைகிறார்.

(ii) குறுகிய காலத்தில் நிறுவனத்தின் எண்ணிக்கை மற்றும் தொழிற்சாலையின் அளவு மாறாமல் இருக்கும்.

(iii) குறுகிய காலத்தில் புதிய நிறுவனங்கள் உள்ளே நுழைவதோ அல்லது பழைய நிறுவனங்கள் வெளியேறுவதோ சாத்தியமில்லை.

**ஆ. உச்ச இலாபம் :** ஒரு நிறுவனத்தின் சராசரி வருவாய், சராசரி செலவினைவிட கூடுதலாகும் போது அந்நிறுவனம் உச்ச இலாபத்தை அடைகிறது. இதனை வரைபடம் மூலம் விளக்கலாம்.

**இ. வரைபடம் :**




குறுகிய காலச் சமநிலை

**ஈ. வரைபடம் -விளக்கம் :** வரைபடத்தில் உற்பத்தி X அச்சிலும், விலை/வருவாய்/ செலவு Y அச்சிலும் குறிக்கப்பட்டுள்ளது. OP என்பது அங்காடியில் நிலவும் விலையாகும். PL என்பது சராசரி வருவாய் அல்லது தேவை வளைகோடு மற்றும் இறுதி வருவாய் வளைக்கோடாகும்.SAC,SMC இவை குறுகிய கால சராசரி, மற்றும் இறுதிநிலை செலவு வளைகோடுகளாகும். E என்ற புள்ளியில் இறுதிநிலை வருவாய் = இறுதிநிலை செலவு. அப்போது இறுதிநிலை செலவு வளைக்கோடு, இறுதிநிலை வருவாய் கோட்டை கீழிருந்து அடிமட்ட புள்ளியில் வெட்டுகின்றது. இந்நிலையில்

அந்நிறுவனம் OM அளவு உற்பத்தியை மேற்கொள்ளும், OM அளவு உற்பத்தியில்ME என்பது சராசரி வருவாய்,MF என்பது சராசரி செலவாகும். இலாபம் என்பது வருவாய்க்கும் செலவுக்கும் உள்ள வேறபாடு ( ME - MF = FE ). ஒரு பொருளுக்கான இலாபம் என்பது FE ஆக கணக்கிடப்படுகிறது. மொத்த இலாபம் என்பது ஒரு பொருளுக்கான இலாபத்தை, அந்த நிறுவனத்தின் மொத்த உற்பத்தியில் பெருக்கும் போது கிடைக்கின்றது. அதாவது மொத்த இலாபம் என்பது = ஒரு பொருளுக்கான இலாபம் X மொத்த உற்பத்தி.

மொத்த இலாபம் என்பது EFXOM = PEFH

இங்கு மொத்த இலாபமானது HFEP. அதாவது கோடிட்டுள்ள செவ்வகப்பகுதியாகும்.

**7. முற்றுரிமையில் விலை, மற்றும் பண்டம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பதை விவரிக்கவும்.**

**(அ) முற்றுரிமையில் விலை, உற்பத்தி தீர்மானம் :** நிறைவுப் போட்டியை போன்றே முற்றுரிமையாளரும் இலாபத்தை உச்சமாக்க விரும்புகின்றனர்.ஒரு முற்றுரிமை நிறுவனமானது கீழ்நோக்கி சரியும் தேவை வளைக்கோட்டை எதிர்கொள்கின்றது. இது அந்நிறுவனத்தின் சராசரி வருவாய் வளைகோடாகும். விலையைக் குறைத்தால் மட்டுமே ஒரு முற்றுரிமையாளர் அதிகம் விற்க முடியும் என்பதை தேவை வளைகோடு தெரிவிக்கிறது. இறுதிநிலை வருவாய் வளைகோடு, சராசரி வருவாய் வளைகோட்டிற்கு கீழே அமைந்துள்ளது.

முற்றுரிமை நிறுவனத்தின் சராசரி செலவு வளைக்கோடு "U" வடிவத்தில் இருக்கும். இறுதிநிலை செலவும், இறுதிநிலை வருவாயும் சமனடையும் போது அதாவது MC = MR, அந்நிறுவனம் சமநிலை அடையும். அப்போது இறுதிநிலை செலவுக் கோடானது ( MC ), இறுதிநிலை வருவாய் கோட்டை (MR) கீழ் இருந்து மேல்நோக்கி செல்லும் போது அடிமட்டத்தில் வெட்டுகின்றது.

**(ஆ) வரைபடம் :**



**(இ) வரைபட விளக்கம் :** மேற்காணும் வரைபடத்தில் AR என்பது சராசரி வருவாய் வளைகோடாகும். MR என்பது இறுதிநிலை வருவாய் வளைகோடாகும். சராசரி வருவாய் வளைகோடு ( AR ) கீழ்நோக்கி செல்கிறது. இறுதிநிலை வருவாய் வளைகோடும் கீழ்நோக்கி செல்கிறது. ஆனால் இது சராசரி வருவாய் கோட்டிற்கு கீழ் அமைந்துள்ளது. E என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலை அடைகிறது. இங்கு இறுதிநிலை செலவும், இறுதிநிலை வருவாயும் சமமாக உள்ளது. இம்முற்றுரிமையாளர் OM அளவு உற்பத்தி செய்து,OP அளவு விலையை நிர்ணயிக்கிறார். இந்த OM அளவு உற்பத்தியில் சராசரி வருவாய் MS ஆகவும் சராசரி செலவு MT ஆகவும் ஏற்படுகிறது. ஒரு பொருளுக்கான இலாபம் என்பது சராசரி வருவாய்க்கும், சராசரி செலவுக்கும் உள்ள வேறுபாடாகும். ஆகவே

MS - என்பது சராசரி வருவாய்
MT - என்பது சராசரி செலவு

ஒரு பொருளுக்கான இலாபம் என்பது

MS – MT = TS

TS என்பது ஒரு பொருளுக்கான இலாபம். இந்த ஒரு பொருளுக்கான இலாபத்தை OM அளவு உற்பத்தியின் அளவினால் பெருக்கும் போது அந்த நிறுவனத்தின் மொத்த இலாபம் கிடைக்கிறது. இதுவே HTSP ஆகும். அதாவது கோடிடப்பட்ட செவ்வக பகுதியே நிறுவனத்தின் இலாபமாகும்.

**8. முற்றுரிமை போட்டியில் விலை,பண்டங்கள் தீர்மானிக்கப்படுவது எவ்வாறு என்பதை விளக்குக.**

**(அ) முற்றுரிமையில் விலை, உற்பத்தி தீர்மானம் :** ஒவ்வொரு முற்றுரிமையாளரும் இலாபத்தை உச்சமாக்க விரும்புகின்றனர். முற்றுரிமை போட்டியில் நிறுவனமானது கீழ்நோக்கி சரியும் தேவை வளைக்கோட்டை எதிர்கொள்கின்றது. இது அந்நிறுவனத்தின் சராசரி வருவாய் வளைகோடாகும். விலையைக் குறைத்தால் மட்டுமே ஒரு முற்றுரிமையாளர் அதிகம் விற்க முடியும் என்பதை தேவை வளைகோடு தெரிவிக்கிறது. இறுதிநிலை வருவாய் வளைகோடு, சராசரி வருவாய் வளைகோட்டிற்கு கீழே அமைந்துள்ளது.

முற்றுரிமை நிறுவனத்தின் சராசரி செலவு வளைக்கோடு "U" வடிவத்தில் இருக்கும். இறுதிநிலை செலவும், இறுதிநிலை வருவாயும் சமனடையும் போது அதாவது MC = MR, அந்நிறுவனம் சமநிலை அடையும். அப்போது இறுதிநிலை செலவுக் கோடானது ( MC ), இறுதிநிலை வருவாய் கோட்டை (MR) கீழ் இருந்து மேல்நோக்கி செல்லும் போது அடிமட்டத்தில் வெட்டுகின்றது.

**(ஆ) வரைபடம் :**




**(இ) வரைபட விளக்கம் :** மேற்காணும் வரைபடத்தில் AR என்பது சராசரி வருவாய் வளைகோடாகும். MR என்பது இறுதிநிலை வருவாய் வளைகோடாகும். சராசரி வருவாய் வளைகோடு ( AR ) கீழ்நோக்கி செல்கிறது. இறுதிநிலை வருவாய் வளைகோடும் கீழ்நோக்கி செல்கிறது. ஆனால் இது சராசரி வருவாய் கோட்டிற்கு கீழ் அமைந்துள்ளது. E என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலை அடைகிறது. இங்கு இறுதிநிலை செலவும், இறுதிநிலை வருவாயும் சமமாக உள்ளது. இம்முற்றுரிமையாளர் OM அளவு உற்பத்தி செய்து,OP அளவு விலையை நிர்ணயிக்கிறார். இந்த OM அளவு உற்பத்தியில் சராசரி வருவாய் MS ஆகவும் சராசரி செலவு MT ஆகவும் ஏற்படுகிறது. ஒரு பொருளுக்கான இலாபம் என்பது சராசரி வருவாய்க்கும், சராசரி செலவுக்கும் உள்ள வேறுபாடாகும். ஆகவே

MS - என்பது சராசரி வருவாய்
MT - என்பது சராசரி செலவு

ஒரு பொருளுக்கான இலாபம் என்பது

MS – MT = TS

TS என்பது ஒரு பொருளுக்கான இலாபம். இந்த ஒரு பொருளுக்கான இலாபத்தை OM அளவு உற்பத்தியின் அளவினால் பெருக்கும் போது அந்த நிறுவனத்தின் மொத்த இலாபம் கிடைக்கிறது. இதுவே HTSP ஆகும். அதாவது கோடிடப்பட்ட செவ்வக பகுதியே நிறுவனத்தின் இலாபமாகும்.

முற்றுரிமைப் போட்டியில் உள்ள பல்வேறு நிறுவனங்கள் குறுகிய காலத்தில் அசாதாரண லாபத்தையோ அல்லது நஷ்டத்தையோ தமது செலவு மற்றும் வருவாய் வளைகோட்டைப் பொருத்து பெற்றுக்கொள்ளும்.

9. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.

**அ. வாரம் :** ஒரு பண்டத்தைப் பயன்படுத்த மாதா மாதம் நாம் செலுத்தும் தொகையே வாரம் எனப்படும். (உ.ம்)வாடகை வீட்டில் குடியிருக்கும் பொழுது அதற்கு நாம் வாடகை செலுத்துகிறோம். இந்த வாரத்திற்கு "**ஒப்பந்த செலுத்துகை**" என்று பெயர்.

**ஆ. ரிக்கார்டாவின் வாரக் கோட்பாடு :** "வாரம் என்பது நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளை பயன்படுத்திக் கொள்வதற்காக நிலத்தின் விளைச்சலிலிருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே ஆகும்" என்று ரிக்கார்டோ வாரத்தை வரையறுத்துள்ளார்.

நிலத்தின் செழிப்புத்தன்மை வேறுபாட்டினாலேயே வாரம் தோன்றுகிறது என்று ரிக்கார்டோ நம்புகிறார். உயர்பண்புகளைக் கொண்ட நிலமே வாரத்தைப் பெறும்.

மேலும் நிலம் அமைந்துள்ள இடத்தின் சிறப்புத் தன்மையைப் பொறுத்தும் வாரம் எழும். (உ.ம்) சந்தைக்கு அருகாமையில் சில நிலங்கள் அமைந்துள்ளது. உற்பத்தியாளர் இதனால் போக்குவரத்து செலவை மிச்சப்படுத்த முடியும். எல்லா நிலங்களும் சமமான செழுமையுடையதாக இருந்தாலும் அமைந்திருக்கும் இடத்தின் சிறப்பினால் வாரத்தைப் பெறும்.

**இ. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு பற்றிய விளக்கம்:** இக்கோட்பாட்டை குடியேற்றத்தின் (Colonization) மூலம் ரிக்கார்டோ விளக்குகிறார். மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் செழுமையான நல்ல நிலத்திலேயே பயிர் செய்வர். அதிக மக்கள் அவ்விடத்தில் குடியேறும் பொழுது நிலத்தின் தேவை அதிகரிக்கும். அதனால் இரண்டாம் தர நிலத்தையே அவர்கள் பயிர் செய்வர். ஆகவே உற்பத்தி செலவு அதிகரிக்கும். இந்நிலையில் முதல் தர நிலம் வாரத்தைப் பெறும். இன்னும் சில காலம் சென்ற பிறகு, மக்கள் தொகை அதிகரிப்பதால் மூன்றாம் தர நிலமும் பயிர் செய்யப்படும். தற்பொழுது இரண்டாம் தர நிலமும் வாரத்தைப் பெறும். முதல் தர நிலம் அதிக வாரத்தைப் பெறும். மூன்றாம் தர நிலம் எவ்வித வாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம் என்று அழைக்கப்படும்.

**ஈ. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு பற்றிய வரைபடம் :**



**உ. வரைபடம் - விளக்கம் :** வரைபடத்தில் X அச்சில் நிலத்தின் தரமும்,Y அச்சில் நிலத்தின் உற்பத்தியும் காட்டப்பட்டுள்ளது. நிழலிட்ட பகுதி வாரத்தைக் குறிக்கும். முதல்தர நிலமும், இரண்டாம் தர நிலமும் வாரத்தைப் பெறுகின்றன. மூன்றாம் தர நிலம் வாரம் பெறவில்லை.ஆகவே இது வாரமில்லா நிலம் என்றும் இறுதிநிலை நிலம் என்றும் அழைக்கப்படுகிறது.

**ஊ. திறனாய்வு :** முதல் தரமான நிலத்திலேயே முதலில் பயிர் செய்யப்படுவதாக ரிக்கார்டோ கருதுகின்றார். ஆனால் இதற்கு எந்தவிதமான சான்றும் இல்லை.

(i) நிலம் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளைக் கொண்டுள்ளதாக ரிக்கார்டோ கருதுகிறார். அந்நிலம் தொடர்ந்து பயிர் செய்யப்பட்டால் சில காலத்திற்குப் பின் நிலத்தின் செழுமை குறையும்.

(ii) நிலத்திற்கு மட்டுமே வாரம் உள்ளதாக ரிக்கார்டோ கருதுகினறார். ஆனால் உழைப்பு, முதல் ஆகிய காரணிகளுக்கும் வாரம் உள்ளதாக நவீன பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

(iii) வாரம் விலையில் சேராது என்று ரிக்கார்டோ கருதுகின்றார். ஒரு நிறுவனத்தைப் பொருத்த வரையில் வாரம் விலையோடு அடங்கும்.

(iv) நிறைவுப் போட்டியின் அடிப்படையில் ரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு அமைந்துள்ளது. நிலவும் நடைமுறையில் எங்கும் நிறைகுறைப் போட்டியே நிலவுகிறது.

**10. பணக் கொள்கையின் நோக்கம் மற்றும் கருவிகளை விவாதிக்கவும்.**

**அ. பணக்கொள்கையின் இலக்கணம் :** "பணக்கொள்கை என்பது பொருளாதார கொள்கையின் நோக்கங்களை அடைய பண அளிப்பு மற்றும் பணத்தை உற்பத்தி செய்ய ஆகும் செலவுகளை கட்டுபடுத்த மைய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும்" என்று எட்வர்டு சாபிரோ கூறியுள்ளார்.

**ஆ. பணக்கொள்கையின் கருவிகள் :** பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கையை ( Credit Control policy ) இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். (i) கடன் நிதி அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் ( Quantitative Credit Control Measures ), (ii) தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Selective Credit Control ) .

**இ. கடன் நிதி அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் :** கடன் நிதி அளவு கட்டுப்பாட்டு முறைகளில் (வங்கி) வட்டி வீதம், ரொக்க இருப்பு வீதம், வெளிச்சந்தை நடவடிக்கைகள் ஆகியன அடங்கும்.

**i. வங்கி வட்டி வீதம் :** மற்ற வணிக வங்கிகளுக்கு மைய வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கும் வட்டி வீதமாகும். பொருளாதாரத்தில் அதிகப்படியான பணப்பழக்கம் ஏற்படுமாயின் மைய வங்கி பணப்புழக்கத்திலிருந்து பணத்தின் அளவைக் குறைக்க வேண்டும். வங்கி வட்டி வீதத்தை அதிகரிப்பதன் மூலம் இதைச் செய்யலாம். மைய வங்கி வட்டி வீதத்தை அதிகரிக்கும் பொழுது, வணிக வங்கிகள் வசூலிக்கும் வட்டி வீதமும் அதிகரிக்கும். இவ்வாறு வட்டி வீதம் அதிகரிப்பதால் (முதலீட்டாளர்கள்) கடன் பெறும் ஆர்வம் வணிகர்களிடையே குறைந்து விடுகிறது.

**ii.** **ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுதல் :** வணிக வங்கிகள் உருவாக்கும் கடன் அளவு அதனுடைய ரொக்க இருப்பு விதத்தைப் பொறுத்து அமையும். ரொக்க இருப்பு வீதத்தை மாற்றும் அதிகாரம் மைய வங்கிக்கு மட்டுமே உண்டு. பணவீக்க காலத்தில் பொருட்களின் விலை உயர்வை தடுக்கவும் கடன் அளவை கட்டுப்படுத்தவும் இக்கருவியை பயன்படுத்துகிறது.

**iii.** **வெளிச்சந்தை நடவடிக்கைகள் :** மைய, மாநில அரசுகளின் கடன்பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் வெளிச்சந்தை நடவடிக்கை நடைபெறுகிறது.

**ஈ. தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டு முறைகள் :**

**i.** கடன் பத்திரங்களை வாங்க அளிக்கப்படும் கடன் அளவில் குறைந்தபட்ச உச்ச வரம்பை நிர்ணயித்தல்.

**ii.** கடன் விரிவாக்க எல்லையைத் தீர்மானித்தல்.

**iii.** சில துறைகளை ஊக்கபடுத்தவும் சிலதுறைகளின் ஆர்வத்தை குறைக்கவும், பல விதமான வட்டி வீதங்கள் விதிக்கப்படுகிறது. நமது நாட்டில், கடைசி கருவியாக இது பயன்படுகிறது. (உ.ம்) ஏற்றுமதியை ஊக்கப்படுத்தவும், வேளாண்மை உற்பத்தியையும்,சிறு தொழில், குடிசைத் தொழில் உற்பத்தியையும் ஊக்கப்படுத்தவும் இது பயன்படுகிறது.

**iv.** மைய வங்கியானது சில விதிகளை அல்லது கொள்கைகளைப் பின்பற்றுமாறு வணிக வங்கிகளை கேட்டுக் கொள்ளுதல் அல்லது அறிவுறுத்துதல்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பணவியல் கொள்கை பயனுள்ளதாக இருக்கும்.

**கூடுதல் முக்கிய வினாக்கள் :**

**10 மதிப்பெண் வினா**

**11. நீண்டகால சராசரிச் செலவு வளைகோடு பற்றி குறிப்பு வரைக**

**அ. நீண்டகால சராசரி செலவு வளைகோடு ( LAC ) :**

நீண்ட காலத்தில் அனைத்துக் காரணிகளும் மாறக்கூடியவை. எனவே தேவையின் மாற்றத்திற்கேற்ப, மூலதனக் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் அளவை அந்நிறுவனம் மாற்றிக்கொள்ளக்கூடும்.

**ஆ. வரைபடங்கள்**




**வரைபடம் - 1**




**வரைபடம் - 2**

**இ. வரைபடங்கள் - விளக்கம் :** நீண்ட காலத்தில் உற்பத்தி அளவில் ஒரு நிறுவனம் பல்வேறு பதலிகளை கொண்டுள்ளது என்ற எடுகோளின் அடிப்படையில் நீண்ட கால சராசரி வளைகோடு அமைந்துள்ளது.

**தொழில்நுட்ப ரீதியில் மூன்று அளவிலான, சிறிய, நடுத்தர, மற்றும் பெரிய நிறுவனங்கள்** இருப்பதாக நாம் எடுத்துக்கொள்வோம்.$SAC_1$ என்பது சிறிய அளவிலான நிறுவனத்திற்கும், $SAC_2$ நடுத்தர அளவான நிறுவனத்திற்கும், $SAC_3$ பெரிய அளவான நிறுவனத்திற்கும் பொருந்தும். குறுகிய காலத்தில், தேவைப்படும் உற்பத்தி OA ஆக இருக்கும் பொழுது, அந்நிறுவனம், குறுகிய அளவிலான உற்பத்தியை தெரிவு செய்யும், ஆனால்,உற்பத்தி அளவு OB யை காட்டிலும் அதிக அளவாக இருக்கும் பொழுது அந்நிறுவனம் நடுத்தர உற்பத்தியை தெரிவு செய்யும். OD யைக் காட்டிலும் அதிக அளவு உற்பத்தி செய்வதற்கு அந்நிறுவனமானது, பெருமளவு உற்பத்தியை தெரிவு செய்யும்.

நீண்ட காலத்தில் அந்நிறுவனம் ஒரு தொழிற்சாலையிலிருந்து மற்றொன்றிற்கு மாறுகிறது. உற்பத்தி அளவு மாறுபடும் பொழுது ஒரு புதிய நிறுவனம் சேர்க்கப்படுகிறது.

**நீண்டகால சராசரிச் செலவு வளைகோடு, திட்ட வளைகோடு** (Planning curve) என்றும் அழைக்கப்படுகிறது. இது **உறை வளைகோடு** எனவும் அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இது பல குறுகிய காலச் செலவு கோடுகளை உள்ளடக்கியுள்ளது.

20 மதிப்பெண் வினா

1. **பணவீக்கத்தின் காரணங்கள், விளைவுகள், அவற்றைக் கட்டுபடுத்தும் முறைகளை விவரிக்கவும்.**

**அ. பணவீக்கம் - இலக்கணம் :** " பணத்தின் மதிப்பு குறைவதும் விலைகள் உயர்ந்து கொண்டு செல்வதுமான ஒரு நிலையை பணவீக்கம்" என்று **கிரௌத்தர்** வரையறுத்துள்ளார். பொதுவாக பணவீக்க காலத்தில் விலை மட்டம் உயரும். அதிகப்படியான பணம் மிகக் குறைந்த பண்டங்களைத் துரத்தும் நிலையை இது குறிப்பிடுகின்றது. இது அளவுக்கு அதிகமான விலையேற்றத்தை குறிக்கும்.

**ஆ. பணவீக்கத்தின் காரணங்கள் :**

**i. போர்க்காலங்களிலும் அதற்குப் பின்பும்** பொதுவாக போர்க்காலங்களிலும் அதற்குப் பின்பும் பணவீக்கம் ஏற்படக்கூடும். போர்க்காலங்களில் மக்களின் வருமானம் அதிகரித்தும், அதற்கேற்ப பொருட்கள் உற்பத்தி செய்யப்படாமல், பற்றாக்குறை ஏற்பட்டு பொருட்களை பங்கீடு செய்தலில் கட்டுப்பாடு ஏற்படும். இதனால் எல்லாவகையான பொருட்களுக்கும் அதிவேக தேவை அதிகரிக்கும். ஆனால் அதே வேகத்தில் அளிப்பு அதிகரிப்பதில்லை. இதனால் பணவீக்கம் ஏற்படுகிறது.

**ii. பணவீக்கம் மேலும் பணவீக்கத்தை ஏற்படுத்தும் :** போரில் வெற்றியடைய அரசு விரும்புவதால், அதிலும் தற்கால போர்கள் அதிக செலவுடையதாக இருப்பதால், இதனை சந்திக்க அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது மேலும், மேலும் பணவீக்கத்தை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

**iii. கூலியை உயர்த்துவதன் விளைவு :** கூலி விலையேற்றத்தை ஏற்படுத்துகிறது. விலையேற்றம் கூலியை உயர்த்துகிறது. இதுவே **பணவீக்க சுழற்சி** எனப்படுகிறது. பற்றாக்குறை நிதியாக்கம் பணவீக்கத்திற்கு ஒரு முக்கிய காரணமாகும். திட்டமிடுதலை கொண்ட வளர்ச்சி குறைந்த நாடுகளில் இத்தகைய பணவீக்கத்தை காணலாம்.

**இ.பணவீக்கத்தின் விளைவுகள் :** விலைமாற்றமானது சமுதாயத்தின் பல பிரிவினரையும் பல வழிகளில் பாதிக்கிறது. அது உற்பத்தியையும், பகர்வையும் பாதிக்கிறது.

**i. உற்பத்தியில் ஏற்படும் விளைவு :** விலையேற்றம் உற்பத்தியை அதிகரிக்கத் தூண்டும். முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தியானது இலாப நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகிறது. விலையேற்ற காலத்தில் ( பணவீக்க காலம் ) அபரிமிதமான இலாபம் ஏற்படும். இது உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும். உற்பத்தியாளர்களும், தொழில் அதிபர்களும் பணவீக்க காலத்தில் பயனடைவார்கள்.

விலை இறக்க காலத்தில் வணிகர்கள் அதிக நட்டத்தை அடைவார்கள். விலையானது உற்பத்திச் செலவைவிட வேகமாக குறைவதால் வணிகர்கள் அதிக கடுமையான நட்டத்தை அடைவார்கள். முதலீட்டிற்கு வாய்ப்புகள் மிகக்குறைவாக இருக்கும். இது பேரளவிலான வேலையில்லா திண்டாட்டத்திற்கு வழி வகுக்கும். இதனால் வாணிப மந்தம் ஏற்படும்.

**ii. பகிர்வில் ஏற்படும் விளைவு :**

**(i.) வணிகர்கள்:** பணவீக்க காலத்தில் வணிகர்களும் உற்பத்தியாளர்களும் அதிக இலாபத்தை ஈட்டுவார்கள். பணவாட்ட காலத்தில் அவர்கள் அதிக நட்டத்தை அடைவார்கள்.

**(ii.) நிலையான வருமானம் பெறுபவர்கள் :** நிலையான வருமானம் உள்ளவர்கள் பணவீக்க காலத்தில் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். கூலியைப் பெறுபவர்களும், மாத ஊதியம் பெறுபவர்களுமான ஆசிரியர்கள், எழுத்தர்கள், உதவியாளர்கள், நீதிபதிகள் ஆகியோரது வருமானம் விலையேற்றமடைவதைப் போல வேகமாக அதிகரிக்காது. பணவீக்க காலத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

**(iii.) முதலீட்டாளர்கள்:** அரசு பத்திரங்களில் முதலீடு செய்திருப்பவர்கள் நிலையான வருமானத்தைப் பெறுவர். நிறுவனப் பங்குகளில் ( Shares ) முதலீடு செய்திருப்பவர்கள் விலையேற்ற காலத்தில் அதிக இலாபத்தையும் விலையிறக்க காலத்தில் அதிக இழப்பையும் அடைவார்கள்.

ஜெர்மனியில் ஆயிரக்கணக்கான நடுத்தரக் குடும்பங்கள் பணவீக்க காலத்தில் அழிந்துவிட்டன. அவர்கள் வாழ்நாள் முழுவதும் சேமித்த பணம் மதிப்பிழந்து ஒன்றுமில்லாததாகிவிட்டது. இதற்கு விலையேற்றமே காரணமாகும்.

**(vi). வாடகை பெறுவோர் ( Rentiers) :** பணவீக்க காலத்தில் இழப்பும் பணவாட்ட காலத்தில் பயனும் அடைவார்கள். பணவாட்ட காலத்தில் அடையும் பயன் தற்காலிகமானதாகும்.

**ஈ. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றலாம் :**

(i.) வரி விதிப்பு ( விகிதத்தை ) அதிகப்படுத்தலாம்.

(ii.) மூலதன திட்டங்களின் ( Project ) மீதான அரசு செலவை குறைத்தல்.

(iii.) இறக்குமதியில் கட்டுப்பாடுகள் விதித்தல்.

(iv.) பங்கீடு

(v.) விலைக் கோட்பாடு

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கண்ட முறைகளின் வெற்றியானது, அரசாங்கம் இக்கொள்கைகளை அமல்படுத்தும் திறமையைப் பொருத்தது.